"ஈசன் நெறிபரப்ப இன்தமிழ் வளர்ப்போம்"

# கலசம்

# KALASAM

சித்திரை - வைகாசி - ஆனி - 2023




## இனிய சோபகிருது வருடமே வருக! வருக!

ISSN 2055-6616

இலண்டனிலிருந்து இலவசமாக வெளிவரும் முதல் ஆன்மிகக் காலாண்டிதழ்

MSR GROUP
EST 2005

# MSR GROUP

Chartered Management Accountants

OUR SERVICES:

- **Accounting & Business Services**
- **Tax Consultancy**
- **Tax Investigation**
- **Locums & Umbrella Payroll**
- **Property Consultancy**
- **Mortgages**
- **Pension & Investment**
- **Insurance**
- **Will & Probate Services**

CELEBRATING 15 YEARS OF EXCELLENCE
2005 - 2020

The Parliamentary Review
BEST PRACTICE REPRESENTATIVE

Best Practice Representative Selected by Parliamentary Review

Head office:
MSR House, 329 Ley Street
Ilford
Essex
IG1 4AA

Regional office:
MSR Chamber, 349 Ley Street
Ilford
Essex
IG1 4AA

Contact:
T: 020 8514 2678
F: 020 8514 6963
E: office@msrgroup.org.uk
W: msrgroup.org.uk

மணி 31 கலசம் KALASAM ஒலி 106

www.saivamunnettasangam.com Charity Registration No:292085

FREE ISSUE

**கலசம்**
**நிருவாகக் குழு**

**ஆசிரியர்**
க ஜெகதீஸ்வரன்

**உதவி ஆசிரியர்கள்**
சி அற்புதானந்தன்
சுதர்சினி வாகீசன்

**விநியோகம்**
சோ நிரஞ்சன்
சு இரத்தினராஜா

**விளம்பரம் நிருவாகம்**
மா இந்துசேகரன்
வ இ இராமநாதன்

**இலங்கைத் தொடர்பு**
வை சிவனருட்செல்வர்
**தொலைபேசி**
0766167547
**மின்னஞ்சல்**
svarul@yahoo.co.uk

**வெளியீடு**
சைவ முன்னேற்றச் சங்கம்

**முகவரி**
SMS
2 Salisbury Road
Manor Park
London E12 6AB

Tel:
020 8514 4732

**மின்னஞ்சல்**
email:
smsukkalasam@gmail.com

# ‘நெய்யும் பாலும் தயிரும்’

“அலங்காரப் ப்ரியக விஷ்ணு, ஜலதாரப் ப்ரியக சிவக” என்று ஒரு சுலோகம் தொடங்குகிறது. திருமால் அலங்காரத்தை விரும்புபவர்; சிவன் அபிடேகத்தை விரும்புபவர் என்பது பொருள்.

“ஆடினாய் நறு நெய்யொடு பால்தயிர்” என்பர் சம்பந்தர். (திரு 3, பதி 1, பா 1) இதில் ஆடினாய் என்பது தில்லையில் நடராசர் நடனம் ஆடுவதையும், நெய், பால், தயிர் முதலியவற்றில் அபிடேகம் ஆடுதலையும் குறிக்கும். “நெய்யும் பாலும் கொண்டாட்டி (கொண்டு - ஆட்டி) நினைந்திலர்” என்பர் அப்பர் (தி 5 பதி 95 பா 4). “நெய்யும் பாலும் தயிருங் கொண்டு நித்தல் பூசனை செய்யலுற்றார்” என்பார் சுந்தரர். (திரு 7 பதி 5 பா 1)

ஆக, தேவார முதலிகள் மூவருமே அபிடேகத்தைச் சிறப்பித்துப் பாடியுள்ளார்கள். எனவே அபிடேகம் என்பது நமது கோயில் வழிபாட்டில் முக்கியமானது என்பது தெளிவு. திருவையாறு திருப்பதிகத்தில், அப்பர் சுவாமிகள் “போதொடு நீர்சுமந்தேத்திப் புகுவாரவர்பின் புகுவேன்” என்பர். பூக்கொண்டு போய் ஆலயத்தை வணங்கவேண்டும். அதுவும் முக்கியமான ஒன்று.

கோயிலுக்குப் போகும்போது வெறுங்கையோடு போகக்கூடாது, ஏதாவது கொண்டு போகவேண்டும் என்று நம்முன்னோர் நமக்குச் சொல்லிவைத்தார்கள். அதனால் கோயிலுக்குப் போகும்போது பாலோ, பழமோ, பூவோ கொண்டுபோவது நமக்குள் வழமையாகிவிட்டது. மேற்கு நாடுகளில் இருக்கும் கோயில்களில் இந்தப் பழக்கத்தால் ஒரு சிக்கல் ஏற்படுகின்றது. பலரும் கோயிலுக்கு வரும் வழியில் பேரங்காடிகளில் பாலும் பூவும் வாங்கி வருகிறார்கள். சிலர் அபிடேகம் முடிந்தபின் பால் கொண்டுவருவதாலும் அர்ச்சனை முடிந்தபின் பூ கொண்டு வருவதாலும் அவை அன்று பயன்படாமல் பழுதாகிவிடுகின்றன. அதுமட்டுமன்றி, விசேட நாள்களில் அளவுக்கு அதிகமாகவும் ஏனைய நாள்களில் எதுவுமே இல்லாமலும் இருக்கும் நிலையும் உருவாகிறது. இந்த நிலையைத் தவிர்ப்பது எப்படி?

அடியார்கள் கோயில் நிருவாகத்திடம் பணமாகக் கொடுக்கலாம். நிருவாகம் அந்த நிதிக்குச் சரியாகக் கணக்கு வைத்து, தினமும் பூசைக்குரிய பூ, பால், பழம் முதலியவற்றைக் குறைவின்றி வாங்கலாம், சிறப்பாகத் தினமும் அர்ச்சனையும் செய்யலாம். இதனால் பொருள்கள் வீணாவதையும் குறைக்கலாம். ஆலய நிருவாகங்கள் இதுபற்றிச் சிந்திக்கவேண்டும்; பொருள்கள் வீணாவதைத் தவிர்க்கவேண்டும்.

**க ஜெகதீஸ்வரன்**
**ஆசிரியர்**

# இந்த இதழில்


| | |
|---|---|
| "வாக்கே நோக்கிய மங்கை" - கந்தபுராணச் சிந்தனைகள் | 03 |
| உயிர்கள் செய்யும் வினைகள்........ | 05 |
| மயிலாடுதுறை - பயணக் கட்டுரை | 07 |
| விவிலியமும் சமக்கிருத மொழியும் | 10 |
| Sanctity of Holy Thiruvasagam | 13 |
| திருநீற்றின் மகிமை | 16 |
| ஒன்பதாம் திருமுறை | 19 |
| பாஞ்சாலி சபதம் | 27 |
| நெல்லிக்கிணற்றடி தான்தோன்றி முருகன் | 31 |
| தமிழும் வடமொழியும் | 33 |
| கிணற்றில் கங்கை நீர் | 35 |
| சித்திரைச் சிறப்புக்கள் | 38 |
| தமிழரின் சைவப் பாரம்பரியமும் உடல், உள நலமும் | 40 |
| திருக்குறள் கதைகள் | 41 |
| Manickavachakar | 43 |


**அட்டைப்படம்: வடிவமைப்பு - குகன்**

**கட்டுரைகளில் உள்ள கருத்துக்களுக்குக் கட்டுரையாளரே பொறுப்பாவர்**

# “வாக்கே நோக்கிய மங்கை”

## கந்தபுராணச் சிந்தனைகள்

“வாக்கே நோக்கிய மங்கை மணாளனை மூக்கே நீ முரலாய்.....” என்று திருநாவுக்கரசு சுவாமிகள் பாடினார். வாக்கைக் கேட்பதற்குரிய புலன் செவி. எனவே உண்மையில் “வாக்கைக் கேட்கக் காத்திருக்கும் செவியுடை மங்கை மணாளனை..” என்ற பொருள்படவே அவர் பாடியிருக்க வேண்டும். அவ்வாறில்லாது “நோக்கிய” என்று அப்பர் சுவாமிகள் பாடியதற்குக் காரணம் உண்டு. வாக்கைச் சொல்லும்போது அவருடைய உதட்டசைவைப் பார்ப்பதனாலே தற்செயலாகச் செவி எதை யாவது தவறவிட்டால் அத்தவறுகளைத் திருத்திக் கொள்ளலாம். அதனால், தன் நாயகனான சிவபெருமான் சொல்வதைப் பிழையின்றிக் கிரகித்துக் கொள்ளலாம் என்ற எண்ணத்தில், தன்னுடைய இரண்டு புலன்களாகிய செவியையும் கண்ணையும் செயற்படுத்துகின்ற பேரன்பு பொருந்திய நாயகியாம் உமாதேவியாரின் மணாளனையே இத்தேவாரம் பாடுகின்றது. சிவபெருமான் மீது இவ்வாறான கரையற்ற அன்பும் பெருமதிப்பும் உமாதேவியாரின் தற்சிறப்பான பண்பாகக் கந்தபுராணம் காட்டுகிறது. இதன் மூலம் நாயகனே தெய்வமென வாழ்வதே சைவத் தமிழ் கலாசாரமெனக் கந்தபுராணம் சொல்லா நிற்கிறது.

Dr க சிவலோகநாதன்

பிரம்மாவின் மகனான தக்கன் சிவபெருமானைக் குறித்துப் பெருந்தவம் செய்து சிவ பெருமானையே நேரில் வரவழைக்கின்றான். உமாதேவியார் தன்னுடைய மகளாக வரச் சிவ பெருமான் அவரை மணம் செய்ய வேண்டும் என்பதுட்படப் பல வரங்களைப் பெறுகின்றான். சிவபெருமான் உமாதேவியாரை மணம் செய்கின்றார். சிவபெருமானைத் தக்கன் கர்வத்தினால் மதிக்காது போகத் தகராறு ஏற்படுகிறது. சிவபெருமானை முழுமுதற் கடவுளாக எவரும் வணங்கக்கூடாதெனவும் வேள்விகள் செய்யக்கூடாதெனவும் தக்கன் கட்டளை இடுகிறான். தக்கனுக்குப் பயந்து எவரும் வேள்விகளே செய்யவில்லை. தக்கன் சிவபெருமானுக்கு அவி கொடுக்காமால் திருமாலை முதல்வராக வைத்து கங்கைக் கரையிலே ஒரு பெரு வேள்வி செய்யத் தொடங்கினான். இதனைக் கண்ட நாரதமுனிவர் கைலைக்குச் சென்றார். சிவபெருமான் வினவ, தான் கண்டதைச் சொன்னார். தந்தையின் யாகத்தைக் காணப் பார்வதிதேவியார் விரும்பினார். சிவபெருமானிடம் அநுமதி கேட்டார். முதலில் மறுத்த சிவபெருமான் பின்னர் இணங்கினார். தோழியர் சூழ்ந்து வர உமாதேவியார் யாகசாலையை அடைந்தார். தக்கன் அவரை உதாசீனம் செய்ததோடு அல்லாமல் சிவபெருமானைப் பலவாறாக நிந்தனை செய்து இழித்துரைத்தான். உமா தேவியாருக்குக் கடும் சினம் உண்டாயிற்று. “நீ என்னை இங்கே பேசியதைப் பொருட்படுத்த மாட்டேன். என்னை உடைய என் நாயகரை இகழ்ந்தாய். அது என் காது வழியே சென்ற நஞ்சைப் போன்றதாகும். எனவே அதனைப் பொறுத்துக் கொள்ளமாட்டேன்.” என்று உமாதேவியார் கூறினார்.

என்னை நீ இவண் இகழ்ந்த தன்மையை
உன்னலேன் எனை யுடைய நாயகன்
தன்னை எள்ளினாய் தரிக்கிலேன் அதென்
கன்னம் ஊடுசெல் கடுவு போலுமால்.

-உமைவரு படலம் 46

அதனாலே சிவபெருமானை இகழ்ந்த உனக்கு அதற்குரிய தண்டனை கிடைப்பதாகுக என்று சாபமிட்ட உமாதேவியார் மீண்டும் கைலையை அடைந்தார். சிவபெருமானின் திருவடிகளை வணங்கிப் “பெரும! தக்கன் தங்களைப் பெரிதும் நிந்தித்தான். அவன் செய்யும்

யாகத்தை அழியுங்கள்." என்று வேண்டினாள். சிவபெருமான் இவ்வுரைகளைக் கேளாதவர் போல் இருந்தார். அதைக் கண்ட உமை, "தங்களிடம் விருப்பு வெறுப்பு அணுகாவாயினும் என் பொருட்டாக அந்தத் தக்கனின் கொடிய வேள்வியை அழிக்க வேண்டும்" எனத் துதித்தார். அந்தச் சமயத்திலே எமை ஆளுகின்ற சிவபெருமான் உவகை என்ற உமையம்மையின் அன்பை வியந்து தேவியின் தளரும் மனத்துள் பொருந்திய செயல் நிறைவேறுமாறு தம் மனத்தில் சற்றே நினைத்தார்.

அந்த எல்லை எமை யாளுடைய அண்ணல் அகிலந்
தந்த மங்கை தனதன்பினை வியந்து தளருஞ்
சிந்தை கொண்ட செயல் முற்றிடுமாறு சிறிதே
புந்தியுள்ளுற நினைந்தனன் நினைந்த பொழுதே

- வீரபத்திரப் படலம் 1

நினைத்தவுடனே வீரபத்திரக் கடவுள் தோன்றினார். உமாதேவியார் காளியை உருவாக்கினார். இருவருமாகச் சென்று தக்கனையுமழித்து அவன் யாகத்தையும் அழித்தனர். நாயகனைத் தக்கன் நிந்தித்த கவலை உமாதேவியாரை விட்டகலவேயில்லை. ஒருநாள், திருக்கைலாய மலையிலே கணங்களெல்லாம் சூழ்ந்திருந்த நேரத்திலே பார்வதி சிவபெருமானின் திருவடிகளை வணங்கிப் பின்வருமாறு சொல்வாராயினார், "நெற்றிக் கண்களையுடைய பெருமானே! யான் தங்களை இகழ்ந்த தக்கனிடம் பலநாள் வளர்ந்து, அத்தீயவன் பெற்ற மகள் என்று சொல்லப்படும் பெயரையும் சுமந்து கொண்டிருக்கிறேன். அவனிடம் வாழ்ந்து வளர்ந்த இந்த உடம்பையும் இதுவரையில் நான் சுமந்தேன். இனிமேலும் அவற்றைச் சுமக்க அஞ்சினேன். அவற்றை எவ்வழி ஒழிப்தென்று அவ்வழியைச் சொல்லி ஆணையிடுக".

ஆங்கதோர் பெயரையு மவன்கண் எய்திய
ஓங்கி நான் வளர்த்த விவ்வுடலந் தன்னையும்
தாங்கினன் மேலவை தரித்தற் கஞ்சினேன்
நீங்குவ னவ்வகை பணித்தி நீயென்றாள்.

- பார்பதிப் படலம் 3

பார்வதியின் வேண்டுதலை ஏற்ற சிவபெருமான் அவளை இமயமலை அரசனின் மகளாகச் செல்லுமாறும் உரிய காலத்தில் தாம் வந்து வதுவை செய்வதாகவும் சொல்லி அனுப்பு கிறார். இவ்வாறாக நாயகனே தெய்வம் என மதித்து "வாக்கே நோக்கிய மங்கை" ஆக இருப்பதே நாயகியாருக்கு இயைந்த இயல்பெனக் கந்தபுராணம் காட்டும் சைவ தமிழ்க் கலாசாரம் சொல்லா நிற்கின்றது.

# நாதன் நாமம்

உச்சியும் காலையும் மாலையும் ஈசனை
நச்சுமின் நச்சி நமவென்ற நாமத்தை
விச்சுமின் விச்சி விரிசுடர் மூன்றினும்
நச்சுமின் பேர்நந்தி நாயக னாகுமே - திருமந்திரம்

காலை உச்சி மாலை என்னும் முப்பொழுதுகளிலும் சிவபெருமானை வழிபடுவதற்கு பேரருள் கொள்ளுங்கள். நமசிவய என்னும் நற்றமிழ்மறையே சிவன் திருப்பெயர் ஆதலால், பேரன்பு கொண்டு அத்திருவைந்தெழுத்தைப் புகழ்ந்து ஓதிப் போற்றுங்கள். சிவபெருமான் திருக்கண்களாக ஞாயிறு, திங்கள், தீ மூன்றும் சொல்லப்படும் அம் மூன்றினும் சிவபெருமான் திருவருள் ஒளி மேம்பட்டு விளங்கும் உண்மை அறிந்து சிவன் திருவுருவாக வழிபடுங்கள். அவன் திருப்பெயர் நந்திநாயகன் என்று நவிலப்படும். முன்நெறியாகிய முதல்வன் முக்கண்ணனாவன். அவன் திருவடி சேர்ப்பிக்கும் நன்நெறியாவது நற்றமிழ் மறையாம் நமசிவாயவே *(1815)*

(நச்சுமின் - சொல்லுங்கள் விச்சுமின் - புகழுங்கள்)

# உயிர்கள் செய்யும் வினைகள் (செயல்கள்) இறைவனால் விதிக்கப்பட்ட பணிகளே!

உயிர்கள் பல பிறவிகளில் நல்வினையும், தீ வினையும் செய்து கொண்டிருக்கின்றன. உதாரணமாக ஒருவன் ஒரு சற்பாத்திரருக்கு ஒரு பிறவியில் தானம் செய்கின்றான். அந்த நல்வினை நிறைவு பெற்றதும் தானம் செய்தவன், தானம் பெற்றவன், அந்த நல்வினை ஆகியன எல்லாம் பின்பு அழிவுறக் காண்கின்றோம். ஆயினும் அந்த நல்வினைப் பயனை தானம் செய்தவனுக்கு இந்தப் பிறவியிலோ அல்லது மறுபிறவியிலோ சேர்க்கப்பட வேண்டும் என்பதுதான் நீதி; நியதி. இந்த நல்வினைப் பயன் தானே சென்று அவனுக்கு சேரமாட்டாது. ஏனெனில் அது அறிவில்லாதது, சடம். உயிர் சிற்றறிவுடையது. ஆனாலும் கருவி கரணங்களின் சார்பு இன்றி ஒன்றையும் அறியமாட்டாது. எனவே அந்த உயிராலும், அந்த நல்வினைப்பயனைச் சேர்ப்பிக்க முடியாது. ஆகவே பாரிசேட அளவையால் எல்லாம் வல்ல முற்றறிவுடைய சிவசக்தியின் ஆணையினாலே அந்த நல்வினைப்பயனை எப்பிறவியிலோ தானம் செய்தவனுக்கு சேர்ப்பிக்கப்படுகிறது. இந்த உண்மையைச் சேக்கிழார் பெருமான் பெரிய புராணத்தில் சாக்கிய நாயனார் சரித்திரத்தில் வைத்து தெளிவுபடுத்துகின்றார்.

> செய்வினையும் செய்வானும்
> அதன் பயனும் கொடுப்பானும்
> மெய்வகையால் நான்காகும்
> விதித்தபொருள் எனக்கொண்டே
> இவ்வியல்பு சைவநெறி
> அல்லவற்றுக்கு இல்லையென
> உய்வகையால் பொருள் சிவனென்
> றருளாலே உணர்ந்தறிந்தார்

எனக் குறிப்பிட்டுள்ளார்.

மானுடப் பிறப்பின் நோக்கம் தான் என்ன? ஐம்புல ஆசைகளால் அலைக்கப்பட்டு வினையைப்பெருக்கி நாம் கொண்டு வந்த பிராரத்த வினையை அநுபவித்துத் தொலைப்பதோடு இப்பிறப்பில் மேலும் ஆகாமிய வினையைச் சேர்த்து எஞ்சி இருக்கும் சஞ்சித வினைப்பாரத்தைக் குறைத்து சத்தினி பாத பக்குவம் வந்தபின் உயிர் விடுதலை அடைய வேண்டும் என்பதே. அதற்கு ஒரே ஒரு வழி இறைவழிபாடு என்று எமது சமய சாத்திரங்கள் அறைகின்றன. இதைத் திருஞானசம்பந்த மூர்த்திப்பெருமான் ஒரு பாசுரத்தில்,

> அவ்வினைக்கு இவ்வினையாம்
> என்று சொல்லும் அஃதறிவீர்
> உய்வினை நாடாது இருப்பதும்
> உம்தமக்கு ஊனம் அன்றே
> கைவினை செய்து எம்பிரான்
> கழல் போற்றுதும் நாமடியோம்
> செய்வினை வந்து எம்மைத்
> தீண்டப்பெறா திருநீலகண்டம்

என்று அருளியுள்ளார்.

மேலும் சிவஞானசித்தியார் ஒரு திரு விருத்தத்தில்,

> மானுடப் பிறவிதானும் வகுத்தது
> மனவாக்காயம்
> ஆனிடத்து ஐந்தும் ஆடும்
> அரன்பணிக்காக அன்றோ
> வானிடத்தவரும் மண்மேல் வந்தரன்
> தனைஅர்ச்சிப்பர்
> ஊன் எடுத்து உழலும் ஊமர்
> ஒன்றையும் உணரார் அந்தோ

என்று சொல்லி வருந்துகின்றார் அருணந்தி சிவாசாரியார்.

திருமுறைகளிலும் மெய்கண்ட சாத்திரங்களிலும் வினை ஒழிவதற்குத் திருவருளைத் துணை நாடவேண்டும் என்று அருளப்பட்டதை நாம் அறிவோம்.

**தில்லையூரான்**

ஆகவே உடல் உயிர் வாழ்க்கைக்கு பொருளைத் தேடுவதோடு இறைவழிபாட்டைத் தவறாமல் கடைப்பிடிப்பது உயிரின் கடப்பாடாக உள்ளது. அதை முக்கரணங்களால் செய்ய வேண்டும். அதிலும், மனமே முக்கியமாக ஈடுபட வேண்டும் என்பதை மணிவாசகம் யாத்திரைப்பத்து என்ற பதிகத்தில் வலியுறுத்தியுள்ளது. இரண்டாவது பாடலில்,

புகவே வேண்டா புலன்களில் நீர்
புயங்கப் பெருமான் பூங்கழல்கள்
மிகவே நினைமின் மிக்க எல்லாம்
வேண்டா போக விடுமின்கள்
நகவே ஞாலத்து உள்புகுந்து
நாயே அனைய நமை ஆண்ட
தகவே உடையான் தனைச்சாரத்
தளராது இருப்பார் தாம்தாமே

என்று அருளப்பட்டுள்ளது.

இறைவன் மலரகிதன். உயிரில் ஆணவமலம் சகசமாய் விரவியுள்ளது. அது மிகவும் வலிமை உடையது, கொடியது என்றும், இறை அருட்சக்தியைத் தவிர எந்தச் சக்தியாலும் வலிகுன்றச் செய்ய முடியாது என்றும் சித்தாந்த நூல்கள் வலியுறுத்துகின்றன. மாயையின் வடிவமான மனம் என்ற உட்கருவி சாதாரணமானது அல்ல, மிகவும் சக்தி வாய்ந்தது. அதன் குணம் எப்போதும் சஞ்சலப்பட்டுக் கொண்டிருப்பது. நாம் ஒன்றை நினைக்கும் பொழுது ஒரு கண நேரத்தில் அதை மறந்து வேறு ஒன்றை நினைக்கும். குரங்கு ஒரு கொம்பரில் இருந்து மறு கொம்பருக்குச் சதா தாவிப்பிடிப்பது போன்றது. அதை ஒரு விடயத்தில் நிலை கொள்ளச் செய்வது சுலபம் அல்ல. எனினும் அதைக் கட்டுப்படுத்தி இறைவனை நினைக்கப் பழக்கப் படுத்தவேண்டும். இதுவே தியானம் என்று கூறப்படும். இதைச் சாதிப்பதற்கு முதற்படியாக சரியை என்னும் சிவதொண்டைக் காயத்தாற் செய்ய வேண்டும். அது முறுக்கி வளர, வாக்கினாற் துதிக்கும் உணர்வு பெருகிவரும். அந்த உணர்வு மேலோங்க இறைவனை நினைக்கும் பக்குவம் ஏற்படும். இந்த நிலை ஏற்பட்டதும் இறைவன் தானே தன்னை நினைக்கத் தருவான்.

ஓர் உயிரின் குறைவில்லாத முயற்சி ஈசன் இடும் பணி என்று சைவ சித்தாந்தம் பகர்கின்றது. இதற்கு பிரமாணம் என்ன? உயிருக்கு ஏதாவது ஒரு வினை செய்து முடிப்பதற்கு ஏழு காரகங்கள் (வினைத்துணைகள்) ஒன்று சேர வேண்டும்.

அவையாவன:

1. உயிர் 2. உடல் 3. கருவிகரணங்கள்
4. நிகழ்காலம் 5. நியதி 6. செய்வினை
7. செய்வினைப்பயன்

உயிரைச் சாராமல் செயற்பட மாட்டாத, அச்சடமாகிய ஆறு காரகங்கள் தாமே ஒன்று சேரமாட்டா. அவற்றின் துணையின்றி அறிய மாட்டாத சிற்றறிவுடைய உயிர்தானே அவ்வினையைச் செய்யவோ அல்லது அவ்வினைப்பயனைக் கருதி நிறுத்திக் கொள்ளவோ மாட்டாது. ஆகவே சர்வ வல்லவ னாகிய இறைவனே ஏவல் வினையாக உயிர்களின் முயற்சிகளுக்கு காரணமாகி நிற்கின்றான். இந்தக் கருத்துக்கள் எல்லாம் அடங்கிய செய்யுள்கள் சிவஞானசித்தியாரில் காணலாம்.

தானஞ்செய் பொருள் தரித்தோர்
செய்தவர் தக்கசெய்தி
ஊனம் பின் உறவே காண்டும் பலம்
உறுவிப்பான் வேண்டும்
ஈனமில் செய்தி ஈசன் இடும்பணி
இவை நாம் செய்தால்
நூனங்கள் அதிக நோக்கி
நுகர்விப்பான் வினைநோய் தீர

உலகு உடல் கரணம் காலம் உறுபலம்
நியதி செய்தி
பல இவைகொண்டு கன்மம்
பண்ணுவது உண்பதனால்
நிலவிடா இவை தாம் சென்று
நினைந்துயிர்நிறுத்திக் கொள்ளா
தலகிலாவறிவன் ஆணை
அணைத்திடும் அருளினாலே

சிவஞானசித்தியார்
2ஆம் சூத்திரம் செய்யுள் 20, 21



# மயிலாடுதுறை

**பயணக்கட்டுரை**

சாவகச்சேரியூர் Dr க கதிர்காமநாதன்

“ஆயிரம் ஆனாலும் மாயுரம் ஆகுமா?” மாயுரம் என்பது மயிலாடுதுறையைக் குறிக்கும். இம்முதுமொழியிலிருந்து இத்தலத்தின் சிறப்பை அறியலாம்.
மயில் + ஆடு + துறை = மயிலாடுதுறை. மயிலாக அம்பாள் நடனமாடிய இடம், துறையாகும்.

காசிக்குச் சமமான ஆறு தலங்களில் இதுவும் ஒன்றாகும். சோழ நாட்டில், காவேரித் தென் கரையில் அமைந்த ஆலயத்தை மயூரம், சூதவனம், சிகண்டிபுரம், பிரமபுரம் என்று குறிப்பிடுகின்றனர். மயூரம் புராணப்பெயராகும். இந்திரன், பிரமன், வியாழபகவான், அகத்தியர், சப்த மாதாக்கள், உமாதேவி, ஆகியோர் வழிபட்ட ஆலயம் இது.

இறைவன் : மயூரநாதர்
இறைவி : அபயாம்பிகை, அஞ்சொல் நாயகி
தலமரம் : மா - வன்னி
தீர்த்தம் : பிரம, காவிரி, ரிஷப தீர்த்தங்கள்
சம்பந்தர், அப்பர், அருணகிரிநாதரால் பாடல் பெற்ற தலம்.

குறைவிலோம் கொடு மானுட வாழ்க்கையால்
கறை நிலாவிட கண்டன் எண்தோளினன்
மறைவலான் மயிலாடுதுறை யுறை
இறைவன் நீழ்கழல் ஏத்தியிருக்கிலே!

- அப்பர்

ஊனத்திருள் நீங்கிட வேண்டில்
ஞானப்பொருள் கொண்டடி யேனும்
தேனொத்தினியான மருஞ்சேர்
வானம் மயிலாடுதுறையே!

- சம்பந்தர்

வரலாறு:
சிவபெருமானை, மாமனாராகிய தட்சன் தனது யாகத்திற்கு அழைக்கவில்லை. இதனால் மனைவி பார்வதியை சிவன் யாகத்திற்குச் செல்ல வேண்டாம் எனத் தடுத்தார். மனம் தாங்காத மகள், பார்வதி தகப்பனின் யாகத்திற்கு சென்றதால். சீற்றமடைந்த சிவன் வீரபத்திர வடிவம் எடுத்துச் சென்று யாகத்தை அழித்தார். அச்சமயம் யாகத்துக்கு ஏற்ற மயில் ஒன்று அம்பாளின் காலில் சரணடைந்தது. மயிலுக்கு அம்பாள் அபயம் அளித்து காப்பாற்றினார். இதைக் கண்டு சிவன் கோபம் கொண்டு, மனைவியாரை மயில் வடிவம் எடுக்கும்படி பணித்தார். மயிலாக மாறியவர், மயிலாடுதுறை அடைந்து சிவனை நோக்கித் தவமிருந்தார். தவத்தை மெச்சி எம்பிரான் தானும் மயிலாக மாறி, கௌரி (மயில்) தாண்டவமாடி தரிசனம் ஆகி அம்பாளை சுயரூபம் பெறவும் அருளினார். மயிலாக ரூபம் எடுத்ததால் மயூரநாதர் என அழைக்கப்படுகிறார்.

சோழர்களால் நிர்மாணிக்கப்பட்ட புகழ் பெற்ற பெரியதலமாகும். 719 அடி நீளமும் 520 அடி அகலமும் உடைய இடத்தில் ஐந்து பிரகாரங்கள் கொண்ட ஆலயமாகும். இராஜகோபுரம், ஒன்பது நிலைகளோடு, மனம் கொள்ளை கொள்ளும் சிற்பங்களோடு, கிழக்கே நோக்கி, கம்பீரமாக காட்சியளிக்கும் 194 அடி உயரமுள்ளது. உட்கோபுரம் மூன்று நிலைகள் கொண்டது.
உள்ளே சென்றதும் இடது பக்கம் திருக்குளத்தைக் காணலாம். மண்டபத்தில் இரு கொடிமரங்கள் உள. நேரே நோக்கினால் கருவறையைக் காணலாம். மயூரநாதர் சுயம்பு லிங்கமாக (இதுவிசேடமானது) வீற்றிருக்கிறார். அருகில் அம்பாள் மயில் வடிவத்தில் அப்பனை வழிபட்ட கோலத்தில் காட்சியளிக்கின்றார். கருவறையின் விமானம் திரிதளம் எனக் கூறப்படுவது.



வலம்வர நர்த்தன கணபதி, தட்சிணாமூர்த்தி அமர்ந்திருக்கும் ஆலமரத்தில் இரண்டு மயில்கள், குரங்குகளோடு இருப்பது, பிரமன் லிங்கோத்பவர், துர்க்கை போன்ற தெய்வங்களைத் தரிசிக்கலாம். தல விநாயகர் அகத்திய சந்தன விநாயகர் எனக் கூறப்படுகிறார். சந்தன மரத்தால் அமைந்த விநாயகர் என்பதாலும், அகத்தியர் வழிபட்டதாலும் இவ்வாறு அழைக்கப்படுகிறது.

சுப்பிரமணியர்: அருணகிரிநாதரால் பாடப் பெற்றவர். சூரசம்காரம் செய்யுமுன் அம்பாளிடம் தான் முருகன் வேல் பெறுவார். ஆனால் இங்கு முருகன் சிவனிடமிருந்து வேல் பெற்று சம்காரம் செய்வது குறிப்பிடத்தக்கது.

துர்க்கை அம்மனின் பாதத்திற்குக் கீழே மகிஷனும், இரு பக்கமும் இரண்டு அசுரர்கள் இருக்கும் வடிவம் காண்பது அரிது.
அம்பாள்: தனிச் சந்நிதியில் நின்ற அழகிய திருக்கோலம். தன்னை நாடிவந்த மயிலுக்கு அபயம் கொடுத்ததால் அபயாம்பிகை என அழைக்கப்படுகிறாள். வலது கரத்தில் கிளியோடு அருள் பாலிக்கிறாள்.
சனிபகவான் - நவக்கிரக சந்நிதியில் - அவரது தலையில் அக்கினியோடு “சுவாலை சனியாக” காட்சியளிக்கிறார். அவருக்கு அருகே சனைச்சரன் காகத்தின் மீதமர்ந்து வடக்கு திசை நோக்கி சிவலிங்க பூசை செய்தபடி வீற்றிருக்கிறார்.

நடராஜர் தாண்டவத்தை மயூர தாண்டவர் என்பர். மாலை நேரப் பூசை இவருக்குத்தான் முதலில் நடைபெறும்.
இச்சந்நிதிக்கு எதிரே மயிலம்மன் சந்நிதி உளது.

மயிலம்மன் சந்நிதி - அம்பாள் சிவன் இருவருமே மயில் வடிவத்தில் அருள்பாலிக்கின்றனர். சிலர் வணங்கும் போது மயிலின் ஓசையை கேட்டிருக்கின்றனர்.

சப்தஸ்தானமாகிய இத் தலத்தில் தினம் தோறும் ஆறுகாலப் பூசைகளும் வழிபாடுகளும் நடைபெறுகின்றன. கந்தபுராண வழிநடைப் படலத்தில் இத்தலம் பற்றிய குறிப்பு உளது. மகாவித்வான் மீனாட்சி சுந்தரம்பிள்ளை அவர்கள் தலபுராணமும், அபயாம்பிகை மாலையும், அபயாம்பிகை அந்தாதியும் பாடியுள்ளார்.

செய்த தவறுகளுக்காக மனம் வருந்தி, மன்னிப்பு வேண்டுவோர் காவிரியில் நீராடி, மாயூரநாதரை வழிபட்டு மன அமைதியடைவர். நடனம் பயிலுவோரும் அதிக அளவில் வழிபடச் செல்வர்.



சென்னை - திருச்சி இராமேஸ்வரம் உள்ள பிரதான புகையிரதபாதைகள் உள்ள சந்திப்பு நிலையம் மயிலாடுதுறையாகும். பல இடங்களிலிருந்து பேருந்து வசதிகள் உள்ளன.

எமது தரிசனம் - 20-09-2019 வெள்ளிக்கிழமை காலை திருவதிகை வீரட்டானம், சிதம்பரம் ஆலயங்களைத் தரிசித்துவிட்டு வழமைபோல் மனைவியாரோடு, மயிலாடுதுறையை மாலைப் பூசை நேரத்திற்கு முன்பே சென்றடைந்தோம். பிரகாரங்கள் சென்று தரிசித்துவிட்டு மூலவரிடம் சென்றோம். அர்ச்சனைச் சீட்டு பெற்றதால் தனியாக நின்ற சிவாசாரியாரிடம் அர்ச்சனை செய்யும்படி வேண்டினோம். அவர் அர்ச்சனைப் பொருள்கள் இல்லாமல் பூசை செய்ய முடியாது என மறுத்துவிட்டார். இது கேட்டு வியந்தோம். இத்தகைய சீரான சிவாசாரியார்கள் இப்போதும் இருக்கிறார்கள் என வியந்தோம்.
இதன்பின்னர் பிள்ளையார் கோயிலுக்கு அருகில் இருக்கும் குதம்பைச் சித்தர் சமாதி சென்று வணங்கினோம்.

குதம்பைச் சித்தர் சமாதி தரிசனம் சாப விமோசனம்
சித்தர்கள் என்பவர் முக்காலம் உணர்ந்தவர்கள். இவர்கள் உண்மையில் வாழ்ந்து காட்டியவர்கள். மேலும் கூடுவிட்டுக் கூடுபாயும் தன்மையுடையவர்கள் ஆவர். பதினெட்டுச் சித்தர்களில் குதம்பைச் சித்தரும் ஒருவராவர்.
யாதவ குலத்தில் பல காலமாக பிள்ளைப்பாக்கியம் இல்லாத தம்பதியருக்கு ஆடிமாதம் விசாக நட்சத்திரத்தில் அவதரித்தார். பெண்கள் அணியும் குதம்பையை (தொங்கட்டான் போன்ற காதணி) முன் வைத்துப் பாடியதால் குதம்பைச் சித்தர் என அழைக்கப்படுகிறார். குதம்பாய் குதம்பாய் என இவரது பாடல்களில் அடிக்கடி வருவதாலும் குதம்பைச் சித்தர் எனவும் கூறுகின்றனர்.

இவரது பாடல்கள் பாமர மக்களும் புரிந்து மகிழ்ந்து, கருத்தறிந்து அநுபவிக்கும் வண்ணம் இருப்பன. உருவமற்ற பரம்பொருளுக்கு பட்டாடையும் அணிகலனும். அடியார்களும் ஏவலாட்களும் எதற்காக என அந்தக் காலத்திலேயே வினா எழுப்பியவர். பெண்மையைப் பற்றிப் போற்றிப் பாடவும் தவறவில்லை.

வெண்காயமுண்டு மிளகுண்டு, சுக்குண்டு
உன் காயம் ஏதுக்கடி? - குதம்பாய்
உன்காயம் ஏதுக்கடி?

வெம்மை + காயம் = வெண்காயம்
வெம்மையான உடல் - சுக்கு - உடல் எரிந்து சுக்கானால் - சுக்கு நீறாகிவிடும். அதனால் வெந்து அழிந்த அயம் என்ற இருதயத்தால் யாருக்கு என்ன பயன்?

மாங்காய்ப் பாலுண்டு மலை மேலிருப்போருக்கு
தேங்காய்ப் பால் ஏதுக்கடி? - குதம்பாய்
தேங்காய்ப் பால் ஏதுக்கடி?

மா - இருள்,
காய் - காயம் - உடல்
பால் = ஊழின் ஊறல்

குதம்பைச் சித்தர் நின்றநிலையில்
கை கூப்பியவாறு காட்சியளிக்கிறார்.



## தெய்வம் ஒன்றே

ஒன்றென் றிருதெய்வ முண்டென் றிரு திருவுயர் செல்வமெல்லாம்
அன்றென் றிருபசித் தோர்முகம் பார்நல் லறமுநட்பும்
நன்றென் றிருநடு நீங்காம லேநமப் கிட்டபடி
என்றென் றிருமன மேயுனக் கேயுப தேசமிதே

- பட்டினத்தடிகள்.

ஏ! மனமே! தெய்வம் ஒன்று என்று நம்பி இரு. அத்தெய்வம் என்றும் உள்ளது என்று நம்பியிரு. உயர்ந்த செல்வங்களெல்லாம் நிச்சயமற்றவை. அவை அநித்தியமென்று நம்பு. பசித்தவர்களுடைய திருமுகத்தை இரக்கத்தோடு பார்த்துக்கொள். அவர்கள் பசிக்கு உன்னால் இயன்ற அன்னத்தை இடு. நல்ல தர்மமும் நல்லவர் சிநேகமும் நல்லெனக் கொண்டு உனது வாழ்க்கையை அமைத்துக் கொள். நடுநிலைக்கு எதுவும் மாறுபடாமல் உன் வினைக்குத் தக்கவாறு தெய்வம் விதித்தபடி இவ்வளவுதான் என்று திருப்திப்படு. இதுவே நான் உனக்குச் செய்ய வேண்டிய உபதேசம்.

# விவிலியமும் சமக்கிருத மொழியும்

வழக்கறிஞர் செல்லத்தம்பி சிறீக்கந்தராசா

மேற்கத்திய நாட்டினர், இந்தியா என்ற நாட்டைப் பற்றி அரேபிய நாட்டு வணிகர்கள் மூலம் பலகாலமாகவே அறிந்திருந்தார்களாயினும், இந்திய நாட்டின் நாகரிகம் பற்றியோ, இலக்கியம் பற்றியோ, பண்பாடு பற்றியோ, இந்திய நாட்டினரின் ஆன்மிகத் தத்துவ இயல்பற்றியோ அறிந்திருக்கவில்லை. அரேபியரின் பிடிக்குள் சிக்கியிருந்த கீழைத்தேய வணிகத்தைத் தம்வசமாக்க வேண்டும் என்ற ஆசை பிறந்ததன்பின்னர், மேலைநாட்டினர் புத்துலகம் காணும் முயற்சி களில் இறங்கினார்கள். இந்த முயற்சியில் முதற்காலடி எடுத்து வைத்தவர்கள் போத்துக்கேயர்தான். இவர்களைத் தொடர்ந்து, இசுப்பானியர், ஒல்லாந்தர், பிரெஞ்சுக்காரர், ஆங்கிலேயர் என்போர் இறங்கினார்கள். சரக்கு வியாபாரம் செய்யவென்று புறப்பட்டுப் போனவர்கள், காலம் செல்லச் செல்லப் பீரங்கிப் படைப்பலம் அற்றிருந்த கீழைத்தேய மக்களையும், தென் அமரிக்க மக்களையும், ஆபிரிக்க மக்களையும் அடக்கி, பின்னர் அடிமை வியாபாரத்திலும் இறங்கினார்கள் என்பது வரலாறு. கீழைத்தேய நாடுகளை அடக்கியாண்ட வரலாற்றைக் "காலனித்துவம்" என்ற சொல்லால் இன்றைய வரலாற்றறிஞர்கள் குறிக்கிறார்கள். அவ்வாறு அடக்கி ஆளப்பட்ட நாடுகளைக் காலனி (colony) என்று குறிக்கிறார்கள். சிலர் "குடியேற்றநாடு" என்று குறிக்கிறார்கள். குடியேற்றப்படாமல், அடிமை யாக்கப்பட்ட இந்த நாடுகளைக் குடியேற்ற நாடுகளென்றோ, "காலனி" என்றோ குறிப்பது எவ்வாறு பொருந்துமென்று வரலாற்று அறிஞர்கள் சிந்திக்க வேண்டும்.

காலனி, காலனித்துவம் என்ற சொற்களின் கதையும் வரலாறும் கழுதை மயிர் பிடுங்கித் தீர்த்தமாடியோன் கதை போல ஆகிவிட்டது. அது ஒருபக்கம் கிடக்கட்டும்.

மேலைத் தேயத்தவர்கள் இந்தியநாட்டின் வேத ஆராய்சிகளிலும், மொழியியல் சார் கற்கை களிலும் ஆர்வம் காட்டத் தொடங்கியது பதினாறாம் நூற்றாண்டிலிருந்துதான். 1583ஆம் ஆண்டளவில் Fillippo Sasetti என்ற ஓர் இத்தாலிய நாட்டு வணிகன் இன்று Goa என்று அழைக்கப்படும் இந்தியநகரில் வியாபாரத்தின் நோக்கம் வாழ நேர்ந்தது. அவன் 1583 தொடங்கி 1588 வரையில் அந்த நகரில் வாழ்ந்த போது, இத்தாலிய மொழிக்கும், அன்று கோவாவில் பேசப்பட்ட சமக்கிருத மொழிக்கும் இடையில் ஏதோ ஒருவித ஒருமைப்பாடு இருப்பதை அவதானித்து, ஐரோப்பிய மொழிகளுக்கும் சமக்கிருத மொழிக்கும் இடையில் நிறைய ஒற்றுமை இருக்கவேண்டும் என்ற ஒரு முடிவுக்கு வந்தான். தன்னுடைய இந்தக் கருத்தை அவன் ஐரோப்பி மக்களுடனும் மற்ற அறிஞர்களுடனும் பகிர்ந்தான். இந்தச் செய்தி, கற்றறிந்த மேலைநாட்டு அறிஞர் பலரைக் கவர்ந்தது. 1588ஆம் ஆண்டளவில் Fillipo Sassetti அவர்கள், இந்தியாவில் Goaஇல் அவருக்கிருந்த அலுவல்களை முடித்துக்கட்டி விட்டு, Florence நகருக்குத் திரும்பிவிட்டார். திரும்பிப் போனவர், தமது மொழியியல் அவதானிப்பை, மற்றைய இத்தாலியருடன் பகிர்ந்திருப்பார் என்று நம்பலாம்.

அவர் திருப்பிப் போன ஆண்டு 1588 என்று மேலே குறிப்பிட்டேன். ஆனால், அந்த ஆண்டிலிருந்து இரண்டு நூற்றாண்டுகள் வரை, இந்தச் செய்தி எத்தகைய விளைவுகளை ஏற்படுத்தியது என்பதை அறிந்து கொள்ள முடியவில்லை. ஆனால் 1786ஆம் ஆண்டளவில் Sir William Jones என்பவர், Gothic; Greek; Latin; Celtic; Persian; Sanskrit ஆகிய மொழிகளுக்குத் தாய் மொழியான ஒரு பொதுமொழி இருந்திருக்க வேண்டும் என்ற ஒருகருத்தை முன்வைத்தார். எனினும், வேத இலக்கியம் பற்றிக் கனமான ஒரு பங்களிப்பைச் செய்தவர் மேலைத் தேசத்தவரான CALMETTES என்பவர்தான்

என்று இந்திய வரலாற்றாசிரியர்கள் குறிப்பிடு கிறார்கள். Calmettes எழுதிய நூலின் பெயர் Rig Veda and Aitareya Brahmana என்பது.

அதன்பின்னர், பத்தொன்பதாம் இருபதாம் நூற்றாண்டுகளில் Benty; Max Muller; Roth; Whitney; Oldenberg; Weber; Burnell; Van Schroeder; Bloomfield; Griffith; Macdonell போன்றோர் வேதவியல் கற்கைகள் தொடர்பில், பல ஆராய்ச்சிக் கட்டுரைகளும் நூல்களும் எழுதியிருக்கிறார்கள். அவர்களின் ஆராய்ச்சிக் கட்டுரைகள், இந்தியாவின் தொல்லிலக்கியப் பாரம்பரியம் பற்றிய முழுமையான அறி வினைப் பெற்றிராத இந்திய இலக்கிய அறிஞர்களின் கண்களை அகலத் திறந்தன என்று சொல்வதில் தவறில்லை. மேலைத் தேய ஆய்வாளர்களின் நோக்கும் போக்கும் எல்லா விடத்தும் நடுநிலை சார்ந்தனவாக இருந்தன என்று சொல்வதற்குமில்லை. சில மேலைத்தேய ஆய்வறிஞரின் நோக்கங்கள், சுயநல நோக்கம் கொண்டனவாக இருந்தன என்று இன்றைய வரலாற்றறிஞர் சுட்டிக்காட்டுகிறார்கள்.

The Yayurveda (Sanskrit text with English translation) என்ற ஒருநூலை, Devi Chand என்ற ஒரு சமக்கிருதப் பாண்டித்தியமும் வேதப் புலமையும் கொண்ட இந்திய வரலாற்றறிஞர் எழுதியிருக்கிறார். அந்த நூலை Munshiram Manoharlal Publishers என்ற இந்திய வெளியீட்டகத்தார் வெளியிட்டிருக்கின்றனர். அந்த நூலின் முகவுரையில் அவர் கூறியிருக்கின்ற ஒரு கருத்து என்னைக் கவர்ந்தது. அந்நாளைய ஆங்கில ஆட்சி யாளரின் குள்ளத்தனத்தை அது படம் பிடித்துக் காட்டுவதால், அதனை உலகத்தமிழ் வாசகரோடு பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன். அவர் கூறிய கருத்தை அப்படியே ஆங்கிலத்தில் தருகிறேன்: -

*"Later on in the nineteenth and twentieth centuries, great European scholars… contributed remarkably in the field of Vedic learning in diverse ways which unveiled many unknown aspects of our early literary heritage.*

*Yet, all the scholars from the West could not remain free of prejudices, and could not always maintain objectivity in their writings. Some of them, it appears, aimed at perpetuating colonial rule in India, while others expected to convert Indians to Christianity through their writings on Oriental subjects. This is indicated by the following statement of no less a person than the enlightened Monier Williams: - … I must draw attention to the fact that I am only the second occupant of the BODEN CHAIR, and that its founder Boden, stated most explicitly in his Will (dated August 15, 1811) that the special object of his munificent bequest was to promote the translation of scriptures (Bible) into Sanskrit, so as to enable his countrymen to proceed in the conversion of the natives of India to the Christian religion". "Thus, it is clear that the motive behind the establishment of the professorship of Sanskrit in the University of Oxford was something else than the promotion of Sanskrit learning. The ego of ROTH was so much against Indian pundits that he considered himself to be a better authority than YASKA in the interpretation of the Vedas. In this respect, even the great Max Muller was no exception. In a letter to his wife, he exposed the purpose with which he translated the Vedas, as evidence by the undernoted extract: - "… this edition of mine and the translation of the Vedas will hereafter tell to a great extent on the fate of India, and on the growth of millions of souls in that country. It is the root of their religion, and to show them what the root is, I feel sure, is the only way of uprooting all that has sprung from it during the last three thousand years". Further, in a letter dated 16th December 1868, he wrote to that Secretary of India: - The ancient religion of India is doomed, and if Christianity does not step in, whose fault will it be".*

விவிலியத்தைச் சமக்கிருத மொழியில் மொழி பெயர்ப்பதன்மூலம், இந்திய இந்துக்களைக் கிறித்தவர்களாக மதம் மாற்றிவிட ஆங்கிலப் புலமையாளர்கள் படாத பாடுபட்டார்கள் என்பதை மேற்படி கூற்றுக்கள் மெய்ப்பிக்கின்றன. சமயம் பரப்புவதற்காகத் தமிழ் படித்த வீரமாமுனிவர் என்ற இத்தாலியர் போல, இந்த ஆங்கிலேயர்களும், சமக்கிரு தத்துக்கும் மேலைத்தேய மொழிகளுக்கும் இடையிலான ஒற்றுமையைக் காட்டுவதற்காகச் சமக்கிருதத்தைக் கற்றார்கள் என்றாற் போலக் காட்டி, இந்திய நாட்டினைக் கிறித்தவ நாடாக்க வேற்று நாட்டுப் புலமையாளர்கள் முயன்றார்கள் என்பதையே மேற்படி கூற்றுக்கள் காட்டுகின்றன. இந்தோ ஐரோப்பிய அல்லது இந்தோ ஆரிய மொழிக்குரிய இருவேறு சமயத்தினர் ஆளையாள் அறுக்க, எவ்வாறு முயன்றார்கள் என்பதை மேற்படி வரலாறு காட்டுகின்றது.

இஃது ஒருபாலாக, திராவிட நாடாக அல்லது புரத்தோ திராவிட நாடாக இருந்த இந்திய நாட்டுக்குள் புகுந்த ஆரியர், திராவிட மொழியை எவ்வாறு தமதாக்கித் திராவிட மொழியையும் திராவிட கலாசாரத்தையும் அழிக்க முயன்றார்கள் என்பதற்கும் ஒரு வரலாறு உண்டு. அந்த வரலாற்றை Sundararaj என்று சமக்கிருத அறிஞர், தமது நூலான Rig Vedic Studies என்ற நூலில் சுட்டிக்காட்டியிருக்கிறார். இருக்கு வேதத்தில் காணப்படுகின்ற திராவிடச் சொற்கள் பலவற்றை எடுத்துக்காட்டி, அந்தச் சொற்களுக்குச் சமக்கிருத மொழியில் வேர்மூலம் காட்டமுடியாது என்றும், அவர் வெளிச்சம் போட்டுக் காட்டியிருக்கிறார்.

கி.பி. எட்டாம் நூற்றாண்டளவில் Kumaarila Bhatta என்ற ஒரு சமக்கிருத மொழிவல்லுநர் வாழ்ந்தார். அவர், வேதாகமம் வல்லவராகக் கருதப்பட்டவர். பவுத்தின் நண்பராகவும் பிற்காலத்தில் பவுத்தர்களின் பரம எதிரியாகவும் கருதப்பட்டவர் திராவிடத் தமிழரின் எதிரியாகவும் வாழ்ந்தவர். இருக்கு வேதத்தில் பல திராவிடச் சொற்கள் உள்ளதைக் கண்டு கொண்ட அவர், அந்தத் திராவிடச் சொற்களைச் சமக்கிருதச் சொற்களாகத் திரிக்க முயன்றவர் அவ்வாறு திரிப்பதற்கு என்ன என்ன எல்லாம் செய்யவேண்டும் என்றும் கூறியவர். குமாரிலப் பட்டர் "தந்திரவார்த்திகம்" என்று ஒரு நூலை எழுதியிருக்கிறார். A.C. Burnell என்ற ஆங்கிலேயர் தலைசிறந்த சமக்கிருத அறிஞராக மதிக்கப்பட்டவர். அவர் 1872ஆம் ஆண்டளவில், மேற்படி "தந்திரவார்த்திகம்" பற்றிய ஒரு கட்டுரையை "Indian Antiquary" என்ற ஆய்வேட்டில் வெளியிட்டார். அந்த ஆய்வுக் கட்டுரையில், "தந்திரவார்த்திகம்" என்ற நூலில் உள்ள ஒரு பந்தியை எடுத்துக் காட்டி விளக்கி இருக்கிறார். குமாரிலப்பட்டர் எழுதியிருந்த அந்தப் பத்தியின் மொழி பெயர்ப்புப் பின் வருமாறு: - "இப்போது கருதப்படவேண்டியவை – ஆரியவர்த்தத்தில் வசிப்பவர்களுக்குத் தெரியாத சொற்கள், மிலேச்சருக்குத் தெரிந்த ஒரு பொருளைக் கொண்டிருந்தால், அவற்றை ஏற்றுக் கொள்ள வேண்டுமா இல்லையா என்பதுதான். அப்படிப்பட்ட சொற்களுக்குச் சமக்கிருத ஒட்டுக்களைச் சேர்த்து (prefixes or suffices or infixes) அவற்றைச் சமக்கிருதச் சொற்களாக மாற்றுவதற்குரிய சாத்தியங்கள் இருக்கின்றன" என்று குமாரிலப் பட்டர் குறிப்பிடுவதை Burnell எடுத்துக் காட்டுகிறார். அவர்காட்டும் மிலேச்சரின் சொற்கள் பல, தமிழ்ச் சொற்கள் என்று தனித்தனியாக எடுத்துக் காட்டிக் குறிப்பிடுகிறார் Burnell. அந்தச் சொற்களாவன - சோறு, நடை, பாம்பு ஆன், வயிறு முதலியன. இந்தச் சொற்களுக்கு ஒட்டுக்கள் கொடுத்து, எவ்வாறு சமக்கிருதச் சொற்களாக அவற்றை மாற்ற வேண்டும் என்று குமாரிலப்பட்டர் கூறுகின்றார். குமாரிலப் பட்டர், "மிலேச்சர்" என்னும் சொல்லைத் தென்னிந்திய மொழிகளைக் குறிக்கவே பயன்படுத்துகிறார் என்று Burnell எழுதியிருக்கிறார்.

ஆதாரம்:

1."The Yayur Veda" (Sanskrit text with English Translation) by Devi Chand ISBN 81-225-02942
2."மொழியாகிய தமிழ்" by ந. கோவிந்தராஜன் ISBN 978-93-82394-56-3

# Sanctity of Holy Thiruvasagam

# திருவாசகத்தின் புனிதம்

Supreme lord Siva Natarajar unmade and remade saint Manikavasagar.

Inner significance of the Holy Thiruvasagam. What is the recipe Thiruvasagam Ennum Sanctified then prescribes?

The compositions of Thiruvasagam are noted for the profundity and mystical import. They are full of spiritual melancholy, remorse and precise guidelines to attain lord Natarajar. In his poetic words, St Manikavasagar places himself in the pitiable condition of the people, with the intention of educating the love of Sivanatarajar, through his heart every second, Saranagathi at the golden feet of Lord Shiva. It is projected in the Thiruvasagam Siva panchadcahara storthiram beginning in the lines “Petra thay thanai maha maranthalum” Pillayai petra thaimaranthalum and in final line with a melting heart sings Namasivayathai nan maravenae.

பெற்ற தாய் தனை மக மறந்தாலும்
பிள்ளையைப் பெரும் தாய் மறந்தாலும்
உற்ற தேகத்தை உயிர் மறந்தாலும்
உயிரை மேவிய உடல் மறந்தாலும்
கற்ற நெஞ்சகம் கலை மறந்தாலும்
கண்கள் நின்றிமைப்பது மறந்தாலும்
நற்றவத்தவர் உள்ளிருந்தோங்கும்
நமச்சிவாயத்தை நான் மறவேனே!

Even if a child forgets its mother
Even if the mother forgets the child
Even if the soul forgets the body
Even if the body forgets the soul
Even if the mind forgets whatever is learnt
Even if the eyes forget to blink
Never shall I forget ever the divine Nama shivaya
which blazes from the heart of the
Tapasis (those in lofty penance)

Any one may find himself to write or speak of Manikavasagar, will feel two-fold sense of obeisance love of God and fear of sin. His reality goes beyond the level of consciousness. As soon as someone talks about him the attention is aroused, the heart is switched on his love for God fascinates. All those who sing Thiruvasagam which melts their hearts and is an indication of the unfathomable mystery embodied in his infinite essence indicates Manikavasagar’s life is the message.

St Manikavasagar was not only counselling the king Arimarthana Pandyan but he was also counselling Lord Siva, according to Thiruvasagam addressing Lord Siva in the following lyrics:

“Nadakathal un adiyar pol nadithu” It is very strange that in the 9th century too, the people acted as they are the slaves /servants of Lord desiring God for eternal sanctification and as Manikavasagar was in the highest stage of bakthi known as Parabakthi in equal level in the capacity of addressing lord Siva “Nee enai petrai nan unai petren, yar kolo saturar” – you got me, a person who is below the calibre of a dog and I got you a great treasure of dive supreme Lord Siva. Who is a hero, or who won?

St Manikavasagar was able to claim “I am he and he is I.” All Saiva devotees who are spiritual aspirants should aspire to follow the footsteps of spiritual leaders, specially learned the lessons from St’ Manikavasagar shown the pathway to lead to the level of supreme Para Pakthi so that we can also consciously with self-confidence, claim “I am he and he is I.”

It is relevant to quote from the Sacred Hymns of Sri Lanka’s sage Yogar Swamy in his Natchinthanai quotes respond to Manikavasagar’s Thiruvasagam path to

reach Lord Siva, commanded "all to seek within to know thyself and to see Lord Siva, everywhere and in everyone and advocated to practice the meditation of "I am he and he is I". Complete surrender of thought, word and action (saranagathi). This is clearly brought out in the words of Manivasagar swamikal is his melodious lyrics as alert and advice to spiritual aspirants based on his experience in his lyrics: Nadakathal un adiyar pol nadithu nan naduve vedahathey pukuntiduvan"

*நாடகத்தால் உன்னடியார் போல்நடித்து நான்நடுவே*
*வீடகத்தே புகுந்திடுவான் மிகப்பெரிதும் விரைகின்றேன்*
*ஆடகச்சீர் மணிக்குன்றே இடையறா அன்புனக்கென்*
*ஊடகத்தே நின்றுருகத் தந்தருள்எம் உடையானே!*

What is the recipe to realize God?
"Bakthi and truthful living! Bakthi does not consist in wearing ochre robes, the organising of religious festivals, the performance of Yagnas, the shaving or matting of hair, carrying of kamandala (bowl) and danda stick etc.
A pure heart for Lord to reside is by removing the (I) uninterrupted contemplation, "Immaipoluthum en nengil neenkathan thal valha" feeling of that everything is the Lord's creations and therefore an attachment to sense objects; embracing all equal love; dedication to true speech these are indeed, "the characteristics of bakthi".
Saint Appar confirms that God resides within each person. He also goes beyond the microcosm to the wide world and sees him in everything, everything as an image of him and also him as a witness external to everything. Let me close by illustrating this threefold existence "Avayethaneyai, Avayeyai theneyai" which is the fundamental of our shastras from three popular hymns in Koil Thiru Pathigam which most people know but do not fully realise the subtle differences that exist in the meaning of their endings. In final beatitude, enlightenment, not only the individual "I" but the cosmos itself melts away. Saint Manikavasagar describes this experience in his Koil Thiru-Pathigam more clearly than all the mystics of the religion of the world have done. One hymn says: "today by the grace the darkness rolled away and the truth about thee rose within me like a brilliant Sun by defying both memory and words to explain it. One thou art without a second all objects resolved into their respective atoms. All atoms fused into one melted in to thee. There was nought without thee, yet anything that was not thou what human mind compare hand this?" (It needs Gnanam, Divine light, to know which thou have not granted me).
Where does a God prefer to reside? Weather he loves to reside in a king's mansion or he prefer to live in a sincere poor devotees' pure heart?
Which kind of design he will prefer built by a person who built in his mind or man with might and wealthy person or administered by trusts or government managed or privately managed? To illustrate this from Periapuranam speaks about Saint Poosalar who constructed a temple in his heart through his thought of mind. As his plan to build a Siva temple for Lord Siva and has fixed a date for consecration. King Cadaver of Kanchipuram built a temple and he also coincidently fixed the same date as fixed by Poosalar Nayanar. Lord Shiva appeared in the dream of the King to fix another day for Maha Kumbabisekam. King obeyed the request of Lord Siva and King proceeded to the village and saw no temple and St Poosalar in meditation. King prostrated at the feet of Saint Poosalar and the incident is a best example to learn lesson whom God loves best not those who loves the God as a pastime with no links to the society who suffers without even to have half stomach of porridge.

In the spirit of the path shown by St' Manikavasagar according to Siva Siddhantham, the time is ripe for the Global Saivates to uplift the present state of the Tamil Nadu Saiva Temples and the plight of priests' (Sivachariars) mere existence. The urgent task of Saivaites is for the restoration of 11,199 Saiva Tamil Temples in tatters without even a single pooja or rituals taking place and 34,000 temples struggling with less than 10,000 rupees offerings.

Vallalalar Arutperum Jothy addressed Manikavasagar with devotion in ecstasy digested the holy Thiruvasagam and showering with praises in the style of his lyrics describing the sweetness of cocktail of thaen (honey) end other natural sweetness of nectar.

Hence Vallalalar whose primary service to God was serving free food to living beings as he felt hunger as a disease and fed without any caste distinction. Vallalalar who adored Thiruvasagam to the highest level, poured out his heart felt thoughts and addressed Manikavasagar as who has crossed the space and in his beautiful flow of Tamil pouring the highest praise to Thiruvasagam in his words as "
"Van kalantha Manikavasaga"

*வான்கலந்த மாணிக்கவாசக! நின் வாசகத்தை*
*நான்கலந்து பாடுங்கால், நற்கருப்பஞ்சற்றினிலே*
*தேன்கலந்து, பால்கலந்து, செழுங்கனித் தீஞ்சுவை கலந்து, என்*
*ஊன்கலந்து, உயிர்கலந்து, உவட்டாமல் இனிப்பதுவே!"*

வாட்டமிலா மாணிக்க வாசக
நின் வாசகத்தை
கேட்டபொழு தங்கிருந்த
கீழ்ப்பறவை சாதிகளும்
வேட்டமுறும் பொல்லா
விலங்குகளும் மெய்ஞ்ஞான
நாட்டமுறும் என்னிலிங்கு
நானடைதல் வியப்பன்றே!."

**Sellapah Selvapaskaran**

## கேள்வி - பதில்


**தர்மசங்கடம் என்கிறோம். தர்மம் என்பது நல்ல காரியம். சங்கடம் என்பதோ கஷ்டம், கடினம். இவை இரண்டையும் இணைத்துச் சொல்கிறோமே! விளக்கம் தரவும்.**

ஆம். சில நேரங்களில் நாம் செய்யக்கூடிய காரியங்கள் தர்ம மார்க்கத்தில் சென்று கொண்டிருந்தாலும் அதனிடையே ஒரு சங்கடமான சூழ்நிலை வரும்போது அதை, "தர்மசங்கடம்" என்று கூறுவோம்.

எனது தந்தையார் உயிருடன் இருக்கும்போது, அவர் நீரிழிவு நோயினால் பாதிக்கப்பட்டு இருந்தார். தினமும் இரண்டு வேளை, அவருக்கு ஊசி போடவேண்டிய கடமை எனக்கு அளிக்கப்பட்டிருந்தது. நான் ஒவ்வொரு முறையும் அவருக்கு ஊசி போடும்போதும், "மன்னிக்கவும்" என்று சொல்லிக் கொண்டே போடுவேன். ஊசி போடுவது என்பது எனது தர்மம். ஆனால் இதுபோன்ற சங்கடமான சூழ்நிலைகளில் தர்மம் எவ்வழியோ அவ்வழியே நின்று நாம் நமது கடமைகளை நிறைவேற்றினால் சங்கடம் தானாகவே விலகிவிடும்.

"தர்மோ ரக்ஷ ரக்ஷித". தர்மத்தை நாம் காப்பாற்றினால் தர்மம் நம்மைக் காப்பாற்றும். தர்மத்தை நிறைவேற்றும்போது எந்தவித பாசப்பிணைப்புகளுக்கும் இடம் கொடுக்காது கடமையை முக்கியம் என நாம் செய்தோமேயானால், அதுவே கடவுள் வழிபாடு. எந்தக் காரணத்துக்காகவும் தர்மத்திலிருந்து வழுவாமல் எவனொருவன் முழுமையாகத் தன் வாழ்வில் இருந்து வருகிறானோ, அவனை நோக்கி உலகம் வரும்.

**நன்றி: அறிவோம் ஆன்மிகம்**



# திருநீற்றின் மகிமை



சிவசின்னங்களில் ஒன்று திருநீறு. இதனை விபூதி என்றும் சொல்வர். இந்த திருநீற்றின் மகிமை பற்றி வாரியார் சொன்ன கதை ஒன்றுண்டு. ஒரு நெசவு செய்யும் தொழிலாளி இருந்தான். அவனுக்கு அன்பான மனைவியும் ஐந்து பிள்ளைகளும் இருந்தனர். குடும்ப அங்கத்தவர்கள் அதிகமாக இருந்ததால் செலவும் அதிகமாக இருந்தது. அவன் தினமும் காலையில் எழுந்து தனது தறியில் நெசவு நெய்யும் பழக்கத்தைக் கொண்டிருந்தான். சிவபூசை செய்வதோ, விபூதி தரிப்பதோ இல்லை. உணவுண்ணும் நேரத்திலும் அந்த இடத்தை விட்டகலாது, அங்கே இருந்து கொண்டே ஆகாரத்தை முடிப்பான். எழுந்து போனால் தனது நெசவு செய்யும் நேரம் வீணா கிவிடும் என்பது அவன் எண்ணம்.

ஆனால், அவனது மனைவிக்கு ஒரு குறை இருந்தது. அவள் தன் கணவனிடம், "நமது குடும்பத்துக்காகச் சிரமம் பாராது இப்படி அயராது உழைப்பது எங்களுக்கு மகிழ்ச்சிதான். ஆனால், சிறிது நேரம் ஒதுக்கி, சிவபூசை செய்து இறைவனை வணங்க வேண்டும். எமது உடல் வளர்க்கப் பொருள் தேடுவதற்காக பாடுபடும் நீங்கள், உங்கள் ஆன்மாவுக்காகக் கொஞ்ச நேரம் ஒதுக்கிச் சிவபூசை செய்து வணங்கலாமே!" என்று கேட்பாள். அதற்கு அவன், "நான் நெய்வதை விட்டுவிட்டுச் சிவபூசை செய்தால், நெய்யும் அளவு குறைந்துவிடும். அதனைச் சிவனா வந்து கொடுப்பார்?" என்று கேட்பான். மனைவிக்கு என்ன சொல்வது என்று புரியாது பேசாமல் அவன் போக்கில் விட்டுவிட்டாள்.

சிலநாள்களில் அந்த ஊருக்கு ஒரு பெரிய மகான் வந்தார். உபந்நியாசம் செய்து, நல்வாக்குக் கூறி அனைவருக்கும் விபூதி அளித்தார். நெசவாளியின் மனைவியும் அங்கே இருந்து உபந்நியாசம் கேட்டாள். விபூதி பெறும்போது மகானிடம், "சுவாமி எனக்கு ஒரு மனக்குறை இருக்கிறது" என்று கூறினாள். மகானும் என்ன குறை என்று கேட்க, "எனது கணவர் தினமும் வேலை செய்வதிலேயே கவனமாக இருக்கிறார். சிறிது நேரம் கூட ஒதுக்கி இறைவழிபாடு செய்வதில்லை. இதனால் பாவம் வந்து சேர்ந்து நம் குடும்பத்திற்கு சாபம் வந்து விடுமோ என்று பயமாக இருக்கிறது" என்றாள். அதற்குச் சாமி, "நீ வீட்டுக்குப் போ. நான் நாளை உன் வீட்டிற்கு வருகிறேன்" என்று அனுப்பி வைத்தார்.



மறுநாள் அந்த மகான் அவளின் வீட்டிற்கு வந்தார். அங்கே அவள் கணவன் தறியில் நெய்து கொண்டிருந்தான். மகானைப் பார்த்ததும் இருந்த இடத்தில் இருந்து கொண்டே வணக்கம் செலுத்திவிட்டுத் தொடர்ந்து நெய்யத் தொடங்கினான். அவன் மன நிலையைப் புரிந்து கொண்ட மகான் அவனைப்பார்த்து, "நீ கீழே இறங்கி வருவதே இல்லையா?" என்று கேட்டார். அவன் "இல்லை" என்று பதில் சொன்னான். மகான் அவனைப்பார்த்து, "நீ ஒரே ஒரு உறுதிமட்டும் எடுத்துக்கொள்" என்று சொன்னார். நெசவாளியும் "சொல்லுங்கள். முயற்சி செய்கிறேன்" என்று சொன்னான். மகானும் அவனை நோக்கி, "நீ சிவபூசை செய்து இறைவனை வணங்கிக் காலத்தைக் கடத்த வேண்டாம். காலை உணவிற்கு முன் யாராவது நீறு தரித்தவர்களைப் பார்த்தபின் சாப்பிடு" என்று சொன்னார். அதற்கு அந்த நெசவாளி, "சரி சாமி நீங்கள்

சொல்வதையே நான் உறுதியாக எடுத்துக் கொள்கிறேன். தினமும் திருநீறு தரித்த ஒருவரைப் பார்த்த பின்பே காலை உணவை அருந்துகிறேன்" என்றான். சாமியும் தலையாட்டிவிட்டுச் சென்றார்.



நெசவாளியின் பக்கத்து வீட்டில் ஒரு குயவன் இருந்தான். அவன் தினமும் காலை எழுந்து சுத்தமாகக் குளித்து விபூதி அணிவது வழக்கம். நெசவாளியிடம் வந்து தினமும் இலவசமாகப் பொடி வாங்கிச் செல்வான். அடுத்த நாள்முதல் குயவன் பொடி வாங்க வரும்போது அவன் நீறணிந்த நெற்றியைப் பார்த்தபின்பே காலை உணவுண்ணும் பழக்கத்தைக் கொண்டிருந்தான் அந்த நெசவாளி.

திடீரென ஒருநாள் குயவன் இவர்கள் வீட்டுக்குப் பொடி வாங்க வரவில்லை. இவன் வழியை வழியைப் பார்த்தபடியே நெசவு நெய்து கொண்டிருந்தான். நண்பகலும் தாண்டி மாலையும் வரத் தொடங்கிவிட்டது. நீறு பூசிய குயவனைக் காணவில்லை. இனியும் பசிதாங்க முடியாது என்று நினைத்த நெசவாளி குயவனைப் பார்ப்பதற்காகத் தறியில் இருந்து இறங்கிப் பக்கத்து வீட்டுக்குச் சென்றான். அங்கே குயவனைக் காணவில்லை. அவர் எங்கே என்று அவர் வீட்டில் கேட்க, அவன் மட்பாண்டம் செய்வதற்காக மண் எடுப்பதற்கு ஊருக்கு வெளியே இருக்கும் காட்டுக்குச் சென்றுவிட்டதாகச் சொன்னார்கள்.

நெசவாளி காட்டை நோக்கி ஓடிச்சென்றான். அங்கே குயவன் ஆழமான பள்ளத்தில் மண்ணை வெட்டிக் கொண்டிருந்தான். அப்போது மண்வெட்டியால் மண்ணை வெட்டும்போது, "டங்" எனும் ஒரு சத்தம் கேட்டது. என்ன சத்தம் என்று பார்ப்பதற்காக மண்ணைக் கைகளால் விலக்கிப் பார்த்தான். அங்கே, ஒரு பெரிய பானை இருந்தது. அதனைத் திறந்து பார்த்தால், உள்ளே பெரிய, பெரிய தங்கக் காசுகள் இருந்தன. அதனைப் பார்த்ததும் குயவனுக்கு மகிழ்ச்சி தாங்க முடியவில்லை. இறைவன் என்னைக் கண் திறந்து பார்த்துவிட்டான். இனி என் துன்பங்கள் எல்லாம் பறந்துவிடும் என்று எண்ணிக்கொண்டு, அந்தப் பொற்காசுகளையே பார்த்துக் கொண்டிருந்தான்.

அதே நேரம், குயவனைத் தேடிவந்த நெசவாளியும் அங்கே வந்து சேர்ந்தான். பள்ளத்துள் எட்டிப்பார்த்து குயவன் இருப்பதைக் கண்டு, குயவனைப் பெயர் சொல்லி அழைத்தான். குயவனும் நிமிர்ந்து பார்க்க, நெசவாளியோ நீறு பூசிய நெற்றியைப் பார்த்த சந்தோஷத்தில் பார்த்துவிட்டேன், பார்த்துவிட்டேன் என்று ஆனந்தக் கூத்தாடினான். அப்படியே அந்த இடத்தை விட்டுச் சென்றுவிட்டான். இதனைப்புரிந்து கொள்ளாத குயவன், தன்னிடம் இருக்கும் பொற்காசுகளைத்தான் குயவன் பார்த்துவிட்டான் என்று எண்ணிப் பயந்தான். இவன் போய் வெளியே சொன்னால், கிராமத் தலைவர் முழுப்பொற்காசுகளையும் பறித்துவிடுவாரே. கைக்கு வந்தது, கைவிட்டுப் போகப்போகிறதே என்று வருந்தினான். பின் மண்ணை வண்டியில் ஏற்றி இடையில் பொற்காசுள்ள பானையையும் மறைத்துவைத்துக் கொண்டு வீட்டிற்குச் சென்றான்.

அச்சமயம் நெசவாளியோ நீறு பூசிய நெற்றியைப் பார்த்த சந்தோஷத்தில் வீட்டுக்கு வந்து உணவருந்திவிட்டுத் தறியில் ஏறி வேலை செய்யத் தொடங்கினான். வீட்டுக்கு வந்த குயவன் வண்டியை விட்டுவிட்டு, நெசவாளி வீட்டுக்கு வந்து, அவன் மனைவியைப் பார்த்து நடந்த சம்பவத்தை விளக்கி, "உன் கணவன் பார்த்துவிட்டேன், பார்த்துவிட்டேன் என்று சொல்லிக் கொண்டு வந்தார். நமது இரு குடும்பங்களும் மிகவும் சிரமப்படுகிறோம். எமக்குள் ஒரு ஒப்பந்தம் செய்து கொள்ளலாம். அதில் இருக்கும் பொற்காசுகளை எண்ணி ஆளுக்குச் சரிபாதியாக

எடுத்துக் கொள்வோம். இனி எமது குடும்பங்கள் சிறக்கும்" என்று கூறினான். பின் இருவரும் பானையில் இருந்த பொற்காசுகளை எண்ணி இரண்டு பங்காகப் பிரித்துக் கொண்டனர்.

நெசவாளியின் மனைவி வீட்டுக்கு வந்து கணவனை நோக்கி, "நீண்ட நேரம் உங்களை வீட்டில் காணவில்லை. எங்கே போயிருந்தீர்கள்?" என்று கேட்டாள். "வேறு எங்கே போவது? பக்கத்துவீட்டு கந்தனைப் பார்க்கச் சென்றேன். நீறு பூசிய நெற்றியைப் பார்த்தால்தானே நீ உணவு கொடுப்பாய். அதனால் போனேன்; பார்த்தேன்; வந்துவிட்டேன்" என்றான். அவளும் "வேறு என்ன பார்த்தீர்கள்?" என்று கேட்க, "இல்லையே! அவரின் நீறு பூசிய நெற்றி மட்டுந்தான் என் கண்ணுக்குத் தெரிந்தது. பார்த்தேன்; வந்தேன்; சாப்பிட்டேன்" என்றான். "பசி வந்திடப் பத்தும் பறந்திடும்" என்று தனக்குள் சிரித்துக் கொண்ட மனைவி, குயவன் வந்ததையும், தன்னுடன் பேசியதையும், பொற்காசுகளைக் கொடுத்ததையும் எடுத்துரைத்து, "எம்பெருமானின் மங்களகரமான திருநீற்றைத் தரிசனம் செய்ததற்கே நமக்கு இப்படிப்பட்ட ஒரு பொற்புதையல் கிடைத்திருக்கிறது. இது நமது உலகியல் வாழ்க்கையை அநுபவிப்பதற்கு என்று கொள்ளவேண்டும். இந்த வாழ்க்கையிலிருந்து கடைத்தேறி மேலே செல்வதற்காக நமக்கு மிகப்பெரிய செல்வம் இருக்கிறது. இனிமேலாவது திருநீற்றைப் பூசி நாம் இறையருள் பெறவேண்டும்" என்று எடுத்துரைத்தாள். அன்றிலிருந்து நெசவாளி சிவபூசையை நியமம் மாறாது செய்யத்தொடங்கினான்.

திருமுருக கிருபானந்தவாரியார் சொன்னதாகக் குறிப்பிட்டு ARRA TV இல் வந்த சொற் பொழிவை முகநூல் பதிவிலே பார்த்து, தகவலை நமக்குத் தந்தவர்,

திரு குமரேசன்.
வடக்கு இலண்டன்

*19ஆம் பக்கத் தொடர்ச்சி*

அடைவுறு மாளிகைத் தேவர் நான்கு சேந்தர்,
அன்புறு பல்லாண்டொன்றோ டிசைப்பா மூன்று
திடமுடை கருவூரர் பத்துவீறிற்
சிறந்த காடவரிரண்டு கண்டர் வேணாடர்
படிபுகளொவ்வொன்று திருவாலி நான்கு
பன்னு புருடோத்தமனார் இரண்டு சேதிராயர்
உடைய திருக்கடைக்காப் பொன்றாக விருபத்
தொன்பா னோது செய்யுண் முன்னூற்றறுபதி னோடைந்தே

பண்- பஞ்சமம், காந்தாரம், புறநீர்மை, சாளரபாணி, நட்டராகம், இந்தளம் என 6.
இதில் சாளர பாணி தேவாரத்தில் இல்லை. பண் தமிழுக்கு உரிய இசை.
"குருகாம் வைரமாம் பழத்தின் இரதமாம் பாட்டில் பண்ணாம்...." அப்பர் திரு 6 ப 15 பா 1

ஐந்துடனால் வருமுறைத் திருக்கடைக்காப்பிற் பண்
ணறையின் மாளிகைத்தேவர் நான்கிலொன்று காந்தாரம்
முந்து கருவூரர் பத்தினரண்டு புறநீர்மை
மொழிந்திடு காந்தாரமொன்று காடவர்கோனிரண்டின்
நந்தலில் சாளரபாணி யொன்று வேணாட்டடிக
ணவின்றதொன்று புறநீர்மை திருவாலியமுதர்
பந்தமறச் சொன்னான்கின் னொன்று நட்டராகம்
பகர்ந்திடின் ஒன்றிந்தளம் மற்றெவையும் பஞ்சமமே

**நன்றி: பன்னிருதிருமுறை, ஜி ச முரளி சதுரா பதிப்பகம்**



# ஒன்பதாம் திருமுறை



## திருவிசைப்பா, திருப்பல்லாண்டு



சைவத் திருமுறைகள்: தோத்திரம், சாத்திரம், பிரபந்தம், புராணம் என்பன. தோத்திரம் திருமுறை 1 - 9, சாத்திரம் - 10ஆம் திருமுறை, பிரபந்தம் - 11ஆம் திருமுறை, புராணம் - 12 ஆம் திருமுறை. தோத்திரத்தின் நிறைவுப்பகுதி ஒன்பதாம் திருமுறை.

இதைத் திருவிசைப்பா மாலை என்றும் குறிப்பிடலாம். அதில் 29 பதிகங்கள். 301 பாடல்கள் தற்போது உள்ளன. பண் உள்ளவை அவை. இறைவன் மெய்ப்புகழை எடுத்துரைக்கின்றன. கற்போர் மனதைக் கசிவித்து இறையன்போடு இசைவிப்பதால் திருவிசைப்பா எனப்படுகின்றது. திரு - தெய்வத்தன்மை, அழகு  இசை - புகழ்  பா - பாடல்

ஒன்பதாம் திருமுறை பாடியவர்கள் 9 பேர்.

செம்பொன்மணி அம்பலத்து நிருத்த னார்க்கு,
    திருவிசைப்பா உரைத்தவர்தம் திருப்பேர் சொல்லில்
பம்புபுகழ் செறிதிருமா ளிகைமெய்த் தேவர்,
    பரிவுடைய சேந்தனார் கருவூர்த்தேவர்
நம்பிகா டவர்கோன்நற் கண்டரா தித்தர்,
    நன்குயர்வே ணாட்டடிகள் திருவாலி யமுதனார்
அம்புவியோர் புகழ்புருடோத் தமர்சேதி ராயர்,
    ஆகஇவர் ஒன்பதின்மர் தாமுறைகண் டடைவே

திருமாளிகைத்தேவர், சேந்தனார், கருவூர்த்தேவர், பூந்துருத்தி நம்பி காடநம்பி, கண்டராதித்தர், வேணாட்டடிகள், திருவாலியமுதனார், புருடோத்தம நம்பி, சேதிராயர் ஆகியோர்.

பாடிய தலங்கள்:

சிதம்பரம், திருவீழிமிழலை, திருவாவடுதுறை, திருப்பூவணம், திருவிடைமருதூர், திருவாரூர் ஆகியவை  தேவார முதலிகளாலும் பாடல்பெற்ற தலங்கள்.

திருவிடைக்கழி, திருக்களந்தை ஆதித்தேச்சரம், திருக்கீழ்க்கோட்டூர் மணியம்பலம், திருமுகத்தலை, திரைலோக்கியசுந்தரம், கங்கைகொண்ட சோளேச்சரம், திருச்சாட்டியக்குடி, தஞ்சை இராசராசேச்சரம் ஆகியவை ஏனையவை.

சிதம்பரம் - 15 பதிகங்கள்.  ஏனைய தலங்கள் பதின்மூன்றுக்கும் ஒவ்வொரு பதிகமாக 13 பதிகங்கள், ஆக, திருவிசைப்பா 28 பதிகங்கள், திருப்பல்லாண்டு -1 பதிகம் கோயிலின் மேற் பாடப்பட்டது.  ஆக மொத்தம் ஒன்பதாம் திருமுறையில் 29 பதிகங்கள் உள்ளன.

**தொடர்ச்சி பக்கம் 18**

# குஞ்சிதபாதத்தில்



சைவ முன்னேற்றச் சங்கம் சிதம்பரேசுவரர் கோயிலை இலண்டனில் நிறுவ நினைத்தபோது அவர்களுக்கு ஆலோசனை வழங்கியதோடு, ஆனந்தநடராசர் திருவுருவம் செய்வதிலிருந்து பிரதிட்டை செய்வது வரைக்கும் பல வழிகளில் உதவியர் சிவத்திரு T N இரத்தினதாண்டவ தீட்சிதர் அவர்கள்.

அன்னார் 2023ஆம் ஆண்டு மார்ச் மாதம் ஐந்தாம் நாள் ஆனந்த நடராசப் பெருமானின் திருவடியை அடைந்தார். இந்தச் செய்தி நமக்கு மிகவும் துயர் தருவதாக அமைந்தது.

சைவ முன்னேற்றச் சங்கத்தின் சிதம்பரேசுவரர் ஆலயம் முதன்முதல் 2008 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 22ஆம் திகதி பிரதிட்டை செய்யப்பட்டது. பின்னர் தற்போதுள்ள ஆலயத்தை நிருமாணித்து மீண்டும் 2019ஆம் ஆண்டு பெப்பிரவரி மாதம் 10ஆம் திகதி கும்பாபிஷேகம் நடைபெற்றது. இந்த இரு நிகழ்வுகளிலும் தீட்சிதர் ஐயா அவர்களுக்குப் பெரும் பங்குண்டு.

கலசம் இதழ் கையிலே கிடைத்தவுடன் படித்துவிட்டு உடனேயே தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு தனது கருத்துக்களையும் பாராட்டையும் தெரிவிக்க அவர் என்றுமே தவறியதில்லை.

இலண்டனில் இருந்து யார் சிதம்பரம் போனாலும், அவரைச் சந்தித்தால், அங்கே அவர்கள் கோயிலைத் தரிசிப்பதற்கு வேண்டிய எல்லாவித ஒழுங்குகளையும் செய்து உதவுவதில் அவர் என்றுமே தவறியதில்லை. “எல்லாவற்றையும் நடராஜர் பார்த்துக்கொள்வார்” என்பதே அவர் எப்போதும் சொல்லும் வாசகம். ஆனந்தநடராசர் மீது அவருக்கிருந்த பக்தியையும் கடமை உணர்வையும் நேரில் கண்டுள்ளேன்.

அவரின் குடும்பத்தினருக்கு கலசம் சார்பில் ஆழ்ந்த அநுதாபத்தைத் தெரிவிக்கின்றோம்.

- கலசம் ஆசிரியர் குழு



# Satash Community Care



உடற்குறைபாடு அல்லது மனநலக் குறைவு காரணமாக உங்களுக்கோ அல்லது உறவினருக்கோ உதவி தேவைப்படின் பல ஆண்டுகள் அநுபவமும் அங்கீகாரமும் பெற்ற எங்கள் சேவையை நாடுங்கள். அவரவர் தேவைகளுக்கேற்பப் பராமரிப்பைத் திட்டமிட்டு வகுத்துச் செயற்படுத்துவதில் எமது நிறுவனம் பாராட்டும் பரிசும் பெற்றது.

மேலதிக விவரம் அறிய எங்களைத் தொடர்பு கொள்ளுங்கள்.

**Orchid Bungalow**
51 Mollands Lane,
South Ockendon RM15 6DH
**Adult Services 01708 850555**

**Jasmine Bungalow**
53 Mollands Lane,
South Ockendon RM15 6DH
**Children Services 01708 851189**

109-111 Molands Lane,
South Ockenden RM15 6DJ
**Adult Services 01708 856592**

**Trinity Community Centre**
East Avenue, London E12 6SG
**Domicilary Care 0203 200 1047**

www.satashcommunitycare.com

Letchmi Loganathan
07957 869620
letchmi@satashcommunitycare.com

Logan Loganathan
07956 377298
logan@satashcommunitycare.com

Sathian Loganathan
07949 755104
sathian@satashcommunitycare.com


உ
சிவயோகம்
SIVAYOGAM
(Charity Reg No: 1050398 Since: 1995)
இந்து கலாசார மையம்
அருள்மிகு இலண்டன் முத்துமாரி அம்மன் திருக்கோயில்
128, Aurelia Road, Croydon CRO 3BF. Tel: 020 8767 9881
சைவப் பெருமக்கள் அனைவருக்கும் வணக்கம். உங்கள் அனைவருக்கும் அம்பாளின் அருள் கிடைக்க எல்லாம் வல்ல இலண்டன் அருள்மிகு முத்துமாரி அம்மனைப் பிரார்த்திக்கின்றோம். அம்பாளின் அருளாலும், அடியார்களின் நன்கொடைகளாலும் அம்பாளுக்கு ஆலயம் அமைப்பதற்கான இடம் "சிவயோகம்" அறக்கட்டளைக்குச் சொந்தமாக வாங்கப்பட்டுள்ளபோதிலும் பணப் பற்றாக்குறை காரணமாக ஆலயம் அமைக்கும் பணி தாமதமாகிறது. அம்பாளுக்கு ஆலயம் அமைக்கும் வேலையைத் துரிதப்படுத்துவதற்கு அடியார்கள் தங்களால் ஆன உதவியைச் செய்யுமாறு தாழ்மையாகக் கேட்டுக்கொள்கின்றோம். தங்கள் நன்கொடையை ஆலயத்தில் நேரடியாகப் பணமாகவோ அல்லது காசோலையாகவோ அல்லது வங்கியூடாகவோ வழங்கலாம்.
வங்கிக் கணக்கு விபரம் Name: SIVAYOGAM BUILDING FUND | Account No: 20057541 |
Sort Code:- 20 21 78| Bank: BARCLAYS
நன்றி
ஆலய நிர்வாகத்தினர்
Muththumari Amman Temple Sivayogam

"Ammanai Saran Addainthal Athika Varamperalam"

# ஈலிங் ஸ்ரீ கனக துர்க்கை அம்மன் ஆலயம்

# SHRI KANAGA THURRKAI AMMAN (HINDU) TEMPLE TRUST

Founded on 10-08- 1991 Charity No: 1014409

5 CHAPEL ROAD LONDON W13 9AE. TEL: **020 8810 0835 020 8840 0485**

www.ammanealing.org Email: info@ammanealing.org







உதிக்கின்ற செங்கதிர் உச்சித் திலகம் உணர்வுடையோர்
மதிக்கின்ற மாணிக்கம் மாதுளம் போது மலர்கமலை
துதிக்கின்ற மின் கொடி மென்கடிக் குங்கும தோயமென்ன
விதிக்கின்ற மேனி அபிராமி என்தன் விழுத்துணையே — அபிராமி அந்தாதி

## புனராவர்த்தன பிரதிஷ்டா

# மஹாகும்பாபிஷேக விஞ்ஞாபனம் 2023

அம்பிகை அடியார்களே!

ஈலிங் பதியில் வீற்றிருந்து அருள் பாலித்து வரும் ஸ்ரீ கனக துர்க்கை அம்மன் தேவஸ்தான புனராவர்த்தன பிரதிஷ்டா மஹா கும்பாபிஷேகம் திருவருள் துணையுடன் நிகழும் சோபகிருது வருடம் வைகாசி மாதம் 18ஆம் நாள் (01/06/2023) வியாழக்கிழமை பகல் 10:30 மணி முதல் 11:34 மணி வரையுள்ள சுபநேரத்தில் நிகழ கைகூடியுள்ளது அனைவரும் வந்து தரிசித்து அம்மன் திருவருளை பெற்றுய்யுமாறு வேண்டுகிறோம். - சுபம் -

## கிரியா கால விபரம்

| | | |
|---|---|---|
| 25-05-2023 | வியாழன் | காலை 8:00 மணி முதல் விநாயக வழிபாடு முதலான கர்மாரம்பம் |
| 26-05-2023 | வெள்ளி | காலை 8:00மணி முதல் சாந்திகள், ஸ்தூபிஸ்தாபனம் முதலானவை<br>மாலை 6:00 மணி முதல் லக்ஷமி பூஜை தீபஸ்தானம் |
| 29-05-2023 | திங்கள் | மாலை 5:00 மணி முதல் யாகாரம்பம்,<br>விம்பஸ்தாபனம் முதலியன (சுவாமி வைத்தல்) |
| 30-05-2023 | செவ்வாய் | காலை 8:00 மணி முதல் தைலாப்பியங்கம் (31-05-2023 புதன்கிழமை<br>மாலை 05:00 மணி வரை அடியார்கள் எண்ணெய்க்காப்பு சாத்தலாம்.) |
| 01-06-2023 | வியாழன் | மஹாகும்பாபிஷேகம் பகல் 10:30 முதல் 11:35 மணி வரை |

பிரதிஷ்டா பிரதமகுரு முத்தமிழ் குருமணி சகலாகமசாங்கிரகர்

**சிவஸ்ரீ நா. சர்வேஸ்வரக்குருக்கள்** (ஸ்ரீ கதிரமலை சிவன் தேவஸ்தானம் சுன்னாகம்)

அவருடன் எங்கள் ஆலய குருமார்கள் மற்றைய இலண்டன் சிவாச்சாரியர்களும் இலங்கை, இந்தியா, ஆஸ்திரேலியா, கனடா போன்ற நாடுகளில் இருந்தும் சிவாச்சாரியர்கள் கலந்து சிறப்பிப்பார்கள்.

ஏராளமான திருப்பணிகள் நிறைவேற்ற வேண்டி உள்ளமையை நீங்கள் அனைவரும் அறிவீர்கள்.
முடிந்தளவு அனைவரதும் பங்களிப்பும் ஒத்துழைப்பும் வேண்டப்படுகின்றது. பங்களிப்பிற்கு
Name: SKTAT TRUST, Lloyds Bank, Account No.: 69708160, Sort Code: 30-98-91

அனைவரும் வருக அம்மன் அருள் பெறுக

இங்ஙனம்

**ஆலய அறங்காவலர் சபை நிர்வாகசபை**

"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"


FOUR SEASONS
SINCE
FOUR SEASONS
1979
Manager
T.Sarangan(Sam)
16 Redbridge Lane East
Ilford, Essex IG4 5ES
Groceries
Soft Drinks
Vegetables &
Fruits
07424 512 889 | 07742 473 134
four.seasons.chilled@gmail.com

உ

சைவ முன்னேற்றச் சங்கம்

# அருள்மிகு ஸ்ரீ சிவகாமசுந்தரி சமேத ஸ்ரீ சிதம்பரேஸ்வரர் சந்நிதி

## விசேட நாள்கள்

### ஏப்பிரல் (14-04-2023) தொடக்கம் ஜூன் (26-06-2023) வரை

| | | |
|---|---|---|
| 14.04.2023 | வெள்ளி | சோபகிருது வருடப் பிறப்பு |
| 17.04.2023 | திங்கள் | பிரதோஷம் |
| 02.05.2023 | செவ்வாய் | பிரதோஷம் |
| 05.05.2023 | வெள்ளி | சித்திரைப் பூரணை |
| 11.05.2023 | வியாழன் | நடேசர் அபிஷேகம் |
| 13.05.2023 | சனி | திருநாவுக்கரசர் குருபூசை |
| 16.05.2023 | வெவ்வாய் | பிரதோஷம் |
| 25.05.2023 | வியாழன் | சேக்கிழார் குருபூசை |
| 01.06.2023 | வியாழன் | பிரதோஷம் |
| 02.06.2023 | வெள்ளி | வைகாசி விசாகம் |
| 05.06.2023 | திங்கள் | திருஞானசம்பந்தர் குருபூசை |
| 15.06.2023 | வியாழன் | பிரதோஷம் |
| 17.06.2023 | சனி | சிதம்பரேசுவரர் கோயில் கொடியேற்றம் |
| 23.06.2023 | வெள்ளி | மாணிக்கவாசகர் குருபூசை |
| 25.06.2023 | ஞாயிறு | சிதம்பரேசுவரர் கோயில் தேர் |
| 26.06.2023 | திங்கள் | ஆனி உத்தரம் நடேசர் அபிஷேகம் |

பிரதோஷ காலத்தில் ஆலயத்தில் விசேஷ பூசை, வழிபாடுகள் நடைபெறுகின்றன.

கோயில் திறந்திருக்கும் நேரம்:

காலை: 8.30 மணிமுதல் 13.00 மணிவரை
மாலை: 5.00 மணிமுதல் 9.00 மணிவரை

ஸ்ரீ சிவகாமசுந்தரி சமேத ஸ்ரீ சிதம்பரேசுவரப் பெருமானை வழிபட்டுத் திருவருள் பெற்று உய்யுமாறு அடியார்களைப் பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

“மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்”

“மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்”

# சைவ முன்னேற்றச் சங்கம் (UK)

# Saiva Munnetta Sangam (UK)

***“Community Service Through Saiva (Hindu) Concern”***

2 Salisbury Road, Manor Park, London E12 6AB.
Tel : 020 8514 4732    Fax: 01268 561805
**www.saivamunnettasangam.com    smsukinfo@gmail.com**

**Registered Charity No: 292085**

## MEMBERSHIP FORM

| | | | |
|---|---|---|---|
| Title | | Home Phone | |
| First Name | | Mobile No | |
| Surname | | Email ID | |
| Address | | Membership | ☐ Annual £15.00 ☐ Life £150.00 |
| Town | | For online payments to Saiva Munnetta Sangam (UK)<br>Lloyds Bank A/c Number : 00373079<br>Sort Code : 30-90-80 | |
| Post code | | | |

I wish to become a member of the Saiva Munnetta Sangam (UK) and enclose herewith cash/ cheque / made online payment for £ ............................ Members are entitled to receive our information emails, Thoranam and Kalasam quarterly magazine.

| | |
|---|---|
| Date | Signature of the Applicant |

| | |
|---|---|
| giftaid it | *Use Gift Aid and you can make your donation worth more. For every pound you give to us, we get an extra 0.25 pence from Inland Revenue, helping your donation go further with no extra cost to you. This means that £15.00 donation can be turned into £18.75 and £150.00 donation can be turned into £187.50 just so long as donations are made through Gift Aid.* |
| | *By ticking (√) the box under the headed ‘Gift Aid’, I confirm that I am a UK Income or Capital Gains taxpayer. I have read this statement and want Saiva Munnetta Sangam UK to reclaim tax on the donation, given on the date shown. I understand that I must pay an amount of Income Tax and/or Capital Gains Tax in the tax year at least equal to the amount of tax that all the charities and CASCs I donate to, will reclaim on my gifts for that tax year. I understand that other taxes such as VAT and Council Tax do not qualify. I understand the charity will reclaim 25p of tax on every £1 that I have given.* |

## For Official Use

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Receipt No | | Pay in slip No | | Date Banked | |
| Membership No | | Membership Starts | | Membership Ends | |
| Approved Executive Committee | | | Introduced by | | |

| | | |
|---|---|---|
| President | Hon. General Secretary | Membership Secretary |



# பாஞ்சாலி சபதம்

சென்ற இதழ்த் தொடர்ச்சி....

அனுஜா

பல தலைமுறையாகச் சந்திர குல மன்னர்கள் தம் பராக்கிரமத்தில் வெற்றியை நிலைநாட்டி நீதி திறம்பாத நன்னெறியில் நாட்டை ஆண்டுவந்தனர். அந்த நன்னாடாகிய அயோத்தியைச் சூதாட்டத்திற்குப் பணயமாக வைப்பதைக்கண்ட விதுரன், இனியும் பொறுமை காப்பது ஆபத்தானது என்று எண்ணிச் சூதாட்டத்தை நிறுத்துமாறு பலவிதமாகப் புத்திமதி சொன்னதும், அதனைப்புரிந்து கொள்ளும் அறிவு அற்றவனாகிய துரியோதனன் கொதித்தெழுந்து கொடுஞ்சொற்களால் அவதூறாகப் பேசியது மட்டுமன்றி "இங்கிருந்து எங்களைத் தொந்தரவு செய்யாதே, எங்களைப் பற்றியும் கவலைப்படாதே! எங்கே உனக்குச் சந்தோஷம் உண்டோ அங்கே போய்விடு" என்று பாசமுடன் நல்வழிகாட்டிய சித்தப்பாவைப் பார்த்துக் கூறுகிறான். அதனைப் பாரதியார்,

"வன்புரைத்தல் வேண்டா - எங்கள்
வலி பொறுத்தல் வேண்டா
இன்பமெங் கண் உண்டோ
அங்கே ஏகி டென்று உரைத்தான்"

என்று கூறுகின்றார்.

அறநெறி என்னவென்று அறிந்திராத துரியோதனன் நாட்டின் பல பாகத்திலிருந்தும் அங்கே வந்து குழுமியிருந்த மன்னர்கள் மத்தியில் தன்னைக் கொல்வதைக் காட்டிலும், மனதைச் சித்திரவதை செய்யும் சொற்களால் சாடிய போதும் குணத்தின் குன்றான விதுரன் அணுவளவு கூட மனம் குழம்பிப் போகாது, (சான்றோர் மனம் என்றுமே தழும்புவதில்லை) "மகனே நீ அழிந்து போவதைத் தடுப்பதற்காகவே என்னால் இயன்ற அளவு முயன்றேன். ஆனால், கொடிய விதி என்னைத் தோற்கடித்துவிட்டது. இனி நான் இங்கிருந்தாலும் போனாலும் என்னடா?" என்று கூறி, மீண்டும் தன் மனமிரங்கி, "ஒருவர் தவறு செய்யும் போது அதனைச் சுட்டிக்காட்டிக் கண்டித்துச் சரியான வழியைக் கூறுபவர்கள் நன்மைக்கே வழிவகுப்பர். ஆனால் தவறு செய்வதைக் கண்டிக்காது இனிமையாகப் பேசி, நல்குபவர்கள் (சகுனிபோன்றோர்) தவறு செய்பவரின் அழிவுக்கே வழிவகுப்பர். இதனை நீ உணரவில்லை. உனக்கு இதுவரை எவரும் சொல்லித்தரவில்லை அல்லவா? நெடுமரமாக மட்டும் வளர்ந்திருக்கிறாய். (ஆனாலும் இப்படி வளர்ந்த அளவுக்கு உன் அறிவுமட்டும் வளரவில்லை) உனக்கு நன்மை தரும் சொற்களைக் காதில் வாங்கிக் கொள்ள விரும்பாத அரசனே! உனது இந்த அரசவையில் அறிவுடைய சான்றோர், பல நாட்டு மன்னர்களையும், அமைச்சராக வைத்திருப்பது பொருத்தமானதல்ல. துட்டர்கள், நீசர், பித்தர், முடவர், பெண்ணாசை கொண்டவர் போன்ற தரங்கெட்ட மனிதர்களே உனது சபைக்கு ஏற்ற அமைச்சர்கள். கோமகனே இதை அறிவாயாக. உனக்கு சொல்லத்தக்கனவெல்லாம் சொல்லிவிட்டேன். உனக்கு மட்டுமல்ல, இந்த அவையில் கூடியிருக்கும் மன்னர்கள், அந்தணர்கள், அறிஞர்கள், அறிவற்ற என் கண்ணனும் அறியும் படியாகச் சொன்னேன். இனி வரப்போவதெல்லாம் எனக்குத் தெரியும். பீஷ்மரும் அறிவார் என்பதைத் தெரிந்துகொள். அப்படி அறிந்திருந்தும் உலகின் ஆசைகளை எல்லாம் வென்ற தவயோகியாகி வீட்டுமனும் ஒன்றுமே பேசாது ஏன் அமைதியாக இருக்கிறார்" என்று விதுரன் வாயிலாகப் பாரதியார் கேள்வி எழுப்புகிறார். இந்தக் கதையை வாசிப்பவர் எவருக்குமே இந்தக் கேள்வி எழவே செய்கிறது

“விதிப்படி நடக்கப்போவது இது என்பதை நான் அறிந்த போதும் உன் மீது கொண்ட அன்பினால் பேதையேன் யான் உன் தகாத செயலைத் தடுக்கப்பார்த்தேன். சரி, சரி, உனக்குச் சொல்வதனால் பலன் ஒன்றும் இனிக் கிடைக்கப்போவதில்லை. இனி உன் அறிவுக்கெட்டியதைச் செய்” என்று சொல்லித் தலைகுனிந்து வாய்மூடித் தனது இருக்கையில் அமர்ந்தான்.

“இனிப் பூமியில் எனது ஆட்சி தொடங்குகிறது” எனக்கலி (சனி) மகிழ்ந்தான். பாரதப்போருக்கு வித்திட்டாயிற்று எனத் தேவர்கள் ஆர்ப்பரித்தனர். ஏனென்றால் பாரதப்போர் வந்தால் தான் அதர்மத்தின் வழிநிற்கும் துட்டர்கள் (துரியோதனன் ஆதியோர்) அழிவார்கள். மீண்டும் தர்மம் தழைக்கும். இதனைப் பாரதியார்,

“பதிவுறுவோம் புவியிலேனக் கலி மகிழ்ந்தார்
பாரதப்போர் வருமென்று தேவர் ஆர்த்தார்”

விதுரன் அறிவுரை கேட்டுத் தர்மர் சூதை நிறுத்தி விடுவாரோ என்று எண்ணிய சகுனி பின்வருமாறு கூறுகிறான். “நீ அழித்ததெல்லாம் பின்னும் நின்னிடத்து மீளும் தர்மா! ஊக்கமெய்து” என வஞ்சனையுடன் தர்மனைச் சூதாட்டத்தைத் தொடரும்படி தூண்டிக்கொண்டேயிருந்தான். இருவரும் சந்தோஷமாகத் தொடர்கின்றனர். சூதாட்டத்தில் தோற்றுப்போய்க் கொண்டிருப்பவனின் மனநிலையைத் திருவள்ளுவர் சூது என்னும் அதிகாரத்தில் கடைசிக்குறளில் (940) கூறுகிறார்

“இழத்தொறூஉம் காதலிக்கும் சூதேபோல் துன்பம்
உழத்தொறூஉம் காதற்கு உயிர்”

உடல்நோய் கூடக் கூட உயிருக்கு உடம்பின் மீதுள்ள ஆசையும் அதிகரிக்கும் (சாவு நெருங்கும் போது வாழ்வின் அருமையை உணர்ந்து மனிதர் வாழ ஆசைப்படுவர்) அதேபோலத் தோற்கத் தோற்கச் சூதாடுபவனுக்குச் சூதாட்டத்தின் மேல் ஆசை அதிகரிக்கும். இந்தக் குறளுக்குப் பொருத்தமாக இருக்கிறது தர்மரின் மனநிலை. அறநெறியை நன்குணர்ந்த தர்மர் இவ்வாறு நடந்துகொள்கிறாரே என்று படிப்போரைச் சிந்திக்க வைக்கிறது. ஊழ்வினை உகுத்து வந்தூட்டும் என்பது இதுதானோ?

நாட்டைப் பணயமாக வைக்கலாமே என்று சகுனி சொன்னாலும் ஒரு பேரரசன் சற்றும் யோசியாது தன் நாட்டைப் பணயமாக வைத்ததைப் பாரதியார் பின்வருமாறு வர்ணிக்கிறார்; மனம் வெதும்புகிறார்; எள்ளி நகையாடுகிறார்.

“கோயில் பூசை செய்வோர் - சிலையைக் கொண்டுவிற்றல் போலும்
வாயில் காத்து நிற்போன் - வீட்டை வைத்திழத்தல் போலும்
ஆயிரங்களான நீதி - யவை உணர்ந்த தருமன்
தேயம் வைத்திழந்தான் சீச்சீ - சிறியர் செய்கை செய்தான்”

பூசாரி தான் பூசை செய்து கொண்டிருக்கும் தெய்வச் சிலையைக் கொண்டு போய் விற்பது போலவும் வாயிலில் நின்று வீட்டைப் பாதுகாக்கவேண்டியவன் வீட்டை வைத்திழத்தல் போலவும் பல ஆயிரக்கணக்கான தர்ம சாஸ்திரங்களைக் கற்றுணர்ந்த தர்மனா இப்படிச் செய்கிறான். “சீச்சீ” இப்படியும் ஒரு கேவலமான செயலைச் செய்கிறானே! செய்வது சரிதானா? என்று சிறுமையைக்கண்டு கொதித்தெழும் உணர்ச்சிக் கவிஞர் பாரதி உலகத்தைப் பார்த்து ஒரு கேள்விக்கணை தொடுக்கிறார்.

மேலும், தொடர்ந்து, நாட்டிலுள்ள மக்கள் எல்லாம் தம்மைப்போன்ற அறிவும் உணர்வும் கொண்ட மனிதர்களென்று அரசர்கள் ஒருவரும் நினைத்துப் பார்ப்பதில்லை. ஆட்டுமந்தைகள் என்றே மக்களை அரசர்கள் மதிப்பிட்டு அவர்களை நடத்துகிறார்கள். எத்தனையோ நீதி நூல்கள் மூலம் நாட்டை எப்படி ஆளவேண்டும் என்று அரசர்கள் கற்றுத் தெரிந்து கொண்டாலும், அவர்கள் அதன்படி ஆட்சி நடத்துவதில்லை. வஞ்சனையின்றி, களவின்றி, தர்ம நெறியைப் புறக்கணிக்காமல், மக்களைத் துன்பப்படுத்தாமல் நாட்டை ஆளும் முறைமை உலகத்தில் எங்கேயுமே இல்லை என்று உலகத்தில் நடைபெறும் அரசியல் நிலையை எண்ணி மனம் வருந்துகிறார். இந்த நிலை இன்னும் மாறவில்லை. என்றுதான் மாறுமோ என்று சான்றோர் ஏங்குகின்றனர். தீர்க்க தரிசியான பாரதியார் இதனை உணர்ந்து பின்வருமாறு கூறுகிறார்.

"சாரமற்ற வார்த்தை மேலே சரிதை சொல்லுகின்றோம்"
இந்த அரசியலைப்பற்றிக் கதைப்பதில் இனி ஒரு பயனுமில்லை. அதனால் கதையைத் தொடர்வோம் என்கிறார்.

தர்மர் ஒவ்வொன்றாக இழக்க இழக்கச் சகுனி அவருக்கு ஆசைகாட்டி எரியும் நெருப்பில் எண்ணெய் ஊற்றுவது போலத் தூண்டிக்கொண்டே இருக்கிறான். "தருமா! நீ உனது நாடு செல்வம், குடிமக்கள் யாவுமே சூதில் இழந்துவிட்டாய். செழிப்புள்ள நாட்டின் சக்கரவர்த்தி என்ற பெருமைப்பட்டதெல்லாம் பழங்கதையாய்ப் போய்விட்டது. ஆனாலும் இன்னும் ஏதாவது ஒன்றைப் பணயம் வைத்து வெற்றியீட்டினாயானால் நீ இழந்தவை யாவையும் திரும்பவும் பெற்றுக் கொள்ள வாய்ப்புண்டு. எல்லாவற்றையும் இழந்துவிட்டாய். இப்போது சூதாட்டத்தை நிறுத்திவிட்டால் நீயும் தம்பிமாரும் எப்படிப் பிழைக்கப் போகிறீர்கள். பொல்லாத இந்த விளையாட்டில் நீங்கள் ஒன்றுமில்லாத பிச்சைக்காரராகி விடுவதை நாங்கள் விரும்பவில்லை. வலிமைமிக்க உனது சகோதரர்கள் இருக்கிறார்களே! அவர்கள் பணயம் வைக்கத்தக்க பெறுமதியுள்ளவர்கள் அல்லவா?" என்று தர்மரைக் கொஞ்சம் கூடச் சிந்திக்க இடம் கொடாது அவரை அழிவுப்பாதையில் இழுத்துச் செல்கிறான் சகுனி என்னும் வஞ்சகன். ஏதோ மந்திரத்துக்குக் கட்டுப்பட்டவர் போலத் தருமரும் மதிமயங்கித் தொடர்கிறார்.

சகுனி தன் தந்திரத்தால் தர்மரைச் சூதாட்ட வலைக்குள் சிக்க வைத்து வெற்றியீட்டுவதைப்பார்த்துக் கருணன் சிரிக்கிறான். சபையோர் கண்ணீர் விடுகின்றனர். வஞ்சனை, சூது, களவு என்பவற்றில் மகிழ்ச்சி காணும் துரியோதனன் மனம் குதூகலிக்க எழுந்து நின்று "பரவு நாட்டை எல்லாம் பணயமாக நாங்கள் வைப்போம். தர்மர் தம்பியரைப் பணயமாக வைத்து வென்று விட்டால் மாமன் சகுனி இதுவரை வென்று எடுத்த எல்லாவற்றையும் திருப்பிக்கொடுத்துவிடுவோம்" என்கிறான். "எங்களை நம்பு தர்மா! நீ எல்லாவற்றையும் இழந்துவிட்டதைப் பார்த்து உங்கள் ஐவரின் மனைவியாகிய திரௌபதி உன்னை இகழ்வாள் அல்லவா? உனது கவலையை நாங்கள் தீர்ப்போம். ஆனபடியால் சந்தோஷமாகச் சூதாட்டத்தைத் தொடர்க" என்கிறான் துரியோதனன்.

இவ்வளவும் நடந்த பின்னரும் அண்ணனின் வார்த்தயை என்றும் மீறாத தம்பிமார் எதுவுமே பேசாது உள்ளம் துடிக்கப் பெருமூச்சுவிட்டு மனம் வெதும்பி வாடி முகம் களை இழந்து, நினை விழந்தவர்களாக அமர்ந்திருந்தனர். முக்காலத்தையும் அறியும் ஞானம் மிக்க சகாதேவனும் ஊமையாகிப் பேசாதிருந்தான். பீஷ்மர் கோபக்கனல் பொங்கத் துடிக்கிறார். கோபக்கனல் பறக்க அங்குள்ள அரசர்கள் வீற்றிருந்தனர். உடம்பெல்லாம் வேதனையால் வெந்து நொந்திருந்தான் விதுரன். மாமனும் மருமகனுமாகிய நாய்கள் சொல்வதைக் கேட்டு மனம் உடைந்துவிட்டான்.

முதலில் பிரம்மஞானம் மிக்க சகாதேவனையும் பின்னர் நகுலனையும் தர்மர் பணயமாக வைத்திழந்தார். அப்போது பேரிருளில் ஒரு சிறு ஒளி தோன்றுவது போலத் தர்மன், “என்ன ஒரு இழிந்த செயலைச் செய்துவிட்டேனே” என ஒருகணம் எண்ணி வருந்தினான். அதனைத் தொடரவிடாது சகுனி, “ஐயனே! வேறொருத்தியின் பிள்ளைகள் இவர்களென்று எண்ணித்தான் இவர்களை முதலில் வைத்தாய். வீமனும் அருச்சுனனும் உன்னைப்போல குந்திதேவியின் பிள்ளைகள் என்று நினைத்துக் கொண்டு அவர்களைப் பணயமாக வைக்கத் தயங்குகிறாயோ?” எனக் கிண்டலாகக் கேட்டான். அதனைக் கேட்ட தர்மர் மிக ஆத்திரங்கொண்டு, “அட, சூதில் நாட்டை வைத்திழந்துவிட்டாலும் நாங்கள் சிந்தனையிலும், உயிரிலும் ஒன்றே என்பதை அறிந்துகொள். இவர்கள் பங்கமுற்றுப் பிரிந்துவிடுவார்கள் என்று பாதகமாக யோசிக்காதே. இதோ கண்ணனின் தோழனும் எங்கள் கண் போன்றவனும் வீரமும் புகழும் மிக்க விஜயனைப் பணயமாக வைக்கிறேன். உனது பொய்மையான காயை உருட்டு” என்றார். சகுனி எண்ணியபடி காயுருண்டது. “திக்கனைத்தும் வெற்றியீட்டத்தக்க பார்த்தனை வென்றெடுத்தோம்” என்று கொக்கரித்து ஆர்ப்பரித்தான் சகுனி.

“இனி வீமனைப் பணயமாகச் சொல்” என்று சகுனி சொன்னதும், தனது இனிய சகோதரர்களான சகாதேவன், நகுலன், அருச்சுனன் என்போரை இழந்த துன்பத்தாலும் ஏமாற்றத்தாலும் அதனால் மனதில் கிளர்ந்தெழுந்த கோபத்தாலும் என்ன சொல்கிறோம், என்ன செய்கிறோம் என்பதை அறியாது, “வீணான வீறாப்புடன் எங்கள் ஐவருக்கும் தலைவன் போன்றவனும், எங்கள் வெற்றிகரமான ஆட்சிக்கு ஆணிவேர் போன்றவனும் தெய்வமே எதிர்த்து நின்றாலும் சீறி அடிக்கும் திறம் கொண்டவனும் பல யானைகளின் வலிமை கொண்டவனுமான வீமனை இங்கே உங்கள் பொய்யான சூதில் பணயமாக வைக்கிறேன் வென்றெடுத்துப்போ” என்று மனம் வேதனையில் பொங்க ஆத்திரத்துடன் கூறினான்.

தொடரும்....

## கிரகணங்களின்போது கோயில்களில் நடை சாத்தப்படுவதற்கு என்ன காரணம்?

கிரகணங்கள் ஏற்படும்போது நமது விண்வெளியில் ஏற்படும் மாற்றங்களினால் நமது சூழ்நிலைகளிலும் மாற்றம் ஏற்படுகிறது. கிரகணம் ஏற்படும் சில மணி நேரத்துக்கு முன்பே நாம் சாப்பிட வேண்டும். கிரகண காலத்தில் எந்தக் காரணத்தைக் கொண்டும் உணவு அருந்துவதோ, தண்ணீர் பருகுவதோ தடைசெய்யப்பட்டுள்ளது.

சாத்திரங்கள் நமது நன்மை கருதியே நமக்கு விதிக்கப்பட்டிருக்கின்றன.

ஆலயங்களில் பூசைக் காலங்களில் சில விசேட நிவேதனங்கள் விதிக்கப்பட்டிருக்கின்றன. இது போன்ற காலங்களில் இது சாத்தியப்படாததால் கிரகண காலங்களில் ஆலயங்கள் நடை சாத்தப்பட்டு கிரகணம் விட்ட பின்னர் சாந்தி செய்து பிறகு திறக்கப்படுகிறது. சில ஆலயங்களில் ஆகமங்கள் பின்பற்றும் முறையினால், சில விசேட கிரகணகால பூசைகள் நடைபெறுவதை நாம் இன்றும் காணலாம்.

அதுமட்டுமல்லாமல் மக்கள் கிரகண காலங்களில், அது புண்ணிய காலமானதால் தங்களுடைய முன்னோர்களை வழிபட கட்டாயமாக்கப்பட்டுள்ளதால் அந்த நேரத்தில் அவர்களை அந்தக் கடமையில் முழுதாக ஈடுபடச் செய்வதற்கும் ஆலயங்கள், பொது மக்கள் தரிசனத்திற்கு அனுமதியை மறுத்துள்ளது. கிரகண புண்ணிய காலத்தில் நீர்நிலைகளின் கரைகளில் நமக்கு உபதேசிக்கப்பட்ட மந்திரங்களைப் பலமுறை ஜபிப்பதினால், அதற்கு பன்மடங்கு பலன் உண்டு என்பதாலும், அந்தக் காலத்தில் ஏழை எளியவர்களுக்கு அளிக்கக்கூடிய தானம் மிக உயர்ந்தது என்பதாலும் அந்த நேரங்களில் மக்கள் வழிபடுதலை ஆலயங்கள் அனுமதிப்பதில்லை.

**நன்றி: அறிவோம் ஆன்மிகம்**

## மிருசுவில் மன்னன் குறிச்சி நெல்லிக்கிணற்றடி

# தான்தோன்றி முருகன் ஆலயம்

இலங்காபுரி நாட்டில், வடமாகாணத்தில், பேர்விளங்கும் யாழ்ப்பாண மாவட்டத்தில், தென்மராட்சி எனும் பிரிவினிலே மிருசுவில் எனும் அழகிய ஊர் அமைந்துள்ளது. விவசாயத்தை ஜீவனோபாயத் தொழிலாகக் கொண்டு வாழ்பவர்கள் இவ்வூர் மக்கள். இவ்வூருக்குக் கிழக்கே மன்னங்குறிச்சி நெல்லிக்கிணற்றடி தான்தோன்றீஸ்வரர் முருகன் ஆலயம் அமைந்து இவ்வூர் மக்களுக்கு அருள்பாலித்த வண்ணம் உள்ளது.

மிருசுவில் கிராமத்தை அழகுறச்செய்வன இங்குள்ள பச்சைப்பசேலென இருக்கும், காண்பவர்களைக் கண்கொள்ளச் செய்யும் வயல்களே! இவ் வயல்கள் சூழ ஓங்கி வளர்ந்து நிற்கும் தென்னை மரங்கள், அதனோடு கூடவே நிற்கும் பனைமரங்கள். இன்னும் இயற்கை அழகுடன் கலந்து அனைவரையும் மெய்ம்மறக்கச் செய்யும் ஊரான மிருசுவில் மன்னங்குறிச்சியில் முருகன் நெல்லிமரத்தடிக்கு அருகில் தான்தோன்றீஸ் வரராகத் தோன்றினார். அதனால் அன்றிலிருந்து இன்று வரை இவ்வாலயத்தின் தலவிருட்சம் நெல்லி மரமாகவே காணப்படுகின்றது. இந்த ஆலயத்தின் வடகிழக்குத் திசையில், ஈசான மூலையில் செல்லத்துரை சுவாமிகளின் தியான நிலையம் அமைந்திருப்பது இவ் ஆலயத்திற்கு மேலும் பெருமை சேர்க்கிறது.

தற்போது விசாலமான கோபுரங்களுடன் காட்சியளிக்கும் முருகன் ஆலயம் அமைந்துள்ள பகுதி, பல ஆண்டுகளுக்கு முன்னர் யாரும் கவனிப்பாரற்ற புதர்கள் அடங்கிய இடமாகவே காணப்பட்டது. அவ் விடத்தில் ஒரு சிறுவன் தோன்றியதாகவும் பின் அச்சிறுவனைக் காணவில்லை என்றும், மறுநாள் அச்சிறுவன் தோன்றிய இடத்தில் வேலும், நாகபாம்பும் இருந்ததாகவும் கண்டவர்களால் கூறப்படுவதை ஆதாரங்கள் மூலம் இன்று அறிந்துகொள்ள முடிகின்றது. அன்று தான்தோன்றியாக எழுந்தருளிய வேலும், நாகபாம்பும் இன்றுவரை அதே இடத்தில் இருந்து முருக அடியார்களுக்கு அருளாட்சி செய்வதைக் காணலாம். அன்று முதல் பல நிர்வாகிகள் ஆலய நிர்வாகத்தைத் திறம்பட செய்து வந்தனர். எனினும் 1998 ஆம் ஆண்டு நித்திய பூசைக்கு நிரந்தர பூசகராக திரு. தில்லையம்பலம் ஐயர் அவர்கள் நியமிக்கப்பட்டார். அவரின் அயராத முயற்சி யினாலும் இக்கிராமத்திலுள்ள அடியார்கள் முருகன் மீது கொண்ட அதீத பக்தியாலும் இவ் வாலயத்தின் சீர்திருத்தப் பணிகளை மேற்கொண்டதன் பயனாக இன்று உலகின் எந்த ஒரு மூலையில் இருக்கும் மக்களால் சிறப்பாகவும் பெருமையாகவும் பேசப்பட்டு வரும் ஆலயமாக இவ்வாலயம் திகழ்கின்றது.

“மன்னங்குறிச்சி முருகா!” என அழைத்து முருகன் அடியார்கள் பக்தி வெள்ளத்தில் மூழ்கி விடுவார்கள். தன்னை அடைக்கலமாக வரும் அடியவர்களுக்கு நெல்லிக்கிணற்றடி முருகப் பெருமான் கேட்பவற்றைக் கொடுக்காமல் இருக்கத் தவறுவதில்லை. அருளை அள்ளி அள்ளி வழங்குகின்றார். பெருமானின் மகிமையை அறிந்த எட்டுத்திக்கிலும் உள்ள மக்கள் வெள்ளம் வெள்ளமாக வந்து முருகப்பெருமானின் அருளைப் பெற்றுச் செல்வது குறிப்பிடத்தக்க தொன்றாகும். அதுமட்டுமன்றி மிருசுவில் எனும் கிராமத்தில் வீற்றிருந்து அருள்பாலிப்பது முருகன் அடியார்கள் செய்த பெரும் புண்ணியம் என்றே கூறலாம்.

இவ்வாலயத்தில் பிள்ளையார், மகாலட்சுமி தேவி, சண்டேஸ்வரர், வைரவர் போன்ற தெய்வங்களுக்கும் சந்நிதானம் அமைக்கப் பட்டுள்ளது. அடியார்களால் வழிபட்டு வருகின்றனர்.

செல்வி இ கிருபிகா

மொட்டைக் கோபுரத்துக்கும், வைரவர் சந்நிதானத்துக்கும் இடையே ஒரு மணிக் கோபுரம் அமைந்துள்ளதோடு, மொட்டைக் கோபுரத்துக்கும், இராஜகோபுரத்துக்கும் நடுவே அலங்காரமணி மண்டபம் அமைந்திருப்பதும் குறிப்பிடத்தக்கது. இந்த ஆலயத்தில் இராஜகோபுரம் ஐந்து தளங்களைக் கொண்டது. இவ்வாலயத்தில் விசாலமான உயரத்தில் இருக்கும் கோபுரத்தின் உச்சியிலே ஐந்து கலசங்கள் வைக்கப்பட்டு வானளாவ உயர்ந்து நிற்கும் இராஜகோபுரக் காட்சியை ஆலயத்திற்கு வருகின்ற பக்தர்கள் கண்டு பக்தி வெள்ளத்தில் மூழ்குவதைக் காணலாம். மேலும், இந்த ஆலயத்தில் அறுபத்து மூன்று நாயன்மார்களின் திருவுருவச்சிலைகள், இரண்டு மணிக் கோபுரங்கள், தேர்முட்டி, தீர்த்தக்கேணி, அன்னதான மண்டபம் போன்றவை சிறப்பாக அமைக்கப்பட்டிருப்பது இந்த ஆலயத்தின் சிறப்பம்சமாகும்.

ஆலய மகோற்சவத் திருவிழா ஒவ்வொரு வருடமும் தவறாது நடைபெற்று வருகின்றது. வைகாசி மாதம், பூரணை தினத்தன்று தீர்த்த உற்சவம் நடைபெறும் வண்ணம் அந்நாளிலிருந்து 15 நாள்கள் முன்னதாக கோயிலின் கொடியேற்ற விழா நடைபெறும். இம் மகோற்சவத் திருவிழாக்களின் போது முருகன் அடியார்கள் தமது நேர்த்திக் கடன்களை நிறைவு செய்வதை அதிகமாகக் காணமுடியும்.

இந்த ஆலயத்தின் இன்னுமொரு சிறப்பம்சம் பிள்ளையாரை முதற்கண் வழிபாடு செய்த பின்னரே, உட்பிரகாரத்திலே மண்டபத்துக்கு வடக்குப் பக்கமாக தல விருட்சமான நெல்லி மரத்தடியில் தான்தோன்றியாக வீற்றிருக்கும் வேல் முருகனுக்கும், நாகதம்பிரானுக்கும் வழிபாடு நடைபெறும். பின்னரே மூல மூர்த்தியான வேலனுக்கு வழிபாடு செய்யப்படுகின்றது.

அதனைவிட ஒவ்வொரு வெள்ளிக்கிழமை, பண்டிகை நாள்கள், முருகனுக்குரிய விரத நாள்கள், குறிப்பாகக் கந்தசஷ்டி, கார்த்திகை விரதம் போன்ற விசேட நாள்களில் அடியார்கள் ஆலயத்திற்குத் திரண்டு வருவதை அவதானிக்கலாம்.

இவ்வாறு முருகன் ஆலயத்தின் சிறப்பம்சங்களை அடுக்கிக் கொண்டே செல்லலாம். நெல்லிக்கிணற்றடி முருகப் பெருமான் தன்னை நாடிவரும் அடியவர்களுக்கு அருளை வழங்கி, இன்னல்களிலிருந்து அவர்களைக் காத்து, வேண்டியதைக் கொடுத்து இவ்வூர் மக்களுக்கும், வெளியூர் மக்களுக்கும் சக்தி வாய்ந்த பெருமானாகத் திகழ்ந்த வண்ணம் உள்ளார். நெல்லிக்கிணற்றடி தான்தோன்றீஸ்வரர் முருகப் பெருமானின் சிறப்புக்கு ஈடு இணையில்லை.

நெல்லிக்கிணற்றடி கந்தனை வணங்குவோம்!
வேண்டியதைப் பெறுவோம்!
கடம்பன் பாதம் பணிந்திடுவோம்!
கதிர்வேலனின் அருளைப் பெற்றிடுவோம்!



# தமிழும் வடமொழியும்

**சில அரசியல் அமைப்புகள் சமஸ்கிருதத்தை எதிர்க்கின்றனவே! இது பற்றி உங்கள் கருத்து.....?**

வடமொழியும் தமிழும் அண்ணன் தம்பி மாதிரி. வடமொழி அண்ணன்; தமிழ் தம்பி. இரண்டும் இரண்டு கண்கள். சமஸ்கிருதம் வலது கண்; தமிழ் இடது கண்.
“வடமொழியும் செந்தமிழும் மறைகள் நான்கும் ஆனவன் காண்........” என்பது அப்பரின் திருத்தாண்டவம்.
“ஆரியம் தமிழொடு இசையானவன்........” என்பது அப்பரின் திருக்குறுந்தொகை.

அதனால் சமஸ்கிருதம் வடமொழி, தமிழ் தென்மொழி. வடமொழி என்பது வடக்குத் திசையில் இருப்பவர்கள் பேசும் மொழி என்று பொருள்படாது. வடம் என்பது ஆலமரத்தைக் குறிப்பது. அது வடவால மரத்தின் கீழிருந்து பாணினி முனிவருக்குச் சமஸ்கிருதத்தை உபதேசம் செய்தார்; அகத்திய முனிவருக்குத் தமிழ்மொழியை உபதேசம் செய்தார் சிவபெருமான். மொழி மனிதரால் உருவாக்கப்பட்டதல்ல. மக்கள் வாழ்வதற்காக சிவபெருமானே அருளிச் செய்தது.

> “வடமொழியைப் பாணினிக்கு வகுத்தருளி அதற்கிணையாத்
> தொடர்புடைய தென்மொழியை உலகெலாம் தொழுதேத்தும்
> குடமுனிக்கு வலியுறுத்தான் சொல்லேற்றுப் பாகரெனில்
> கடன்வரைப்பின் இதன் பெருமை யாவரே கணித்தறிவார்”

என்பது காஞ்சிபுராணம்.

அதனால் வடமொழி தமிழ்மொழி இரண்டும் சைவர்களாக இருக்கும் எங்களுக்குச் சொந்தம்.

கும்பாபிஷேகம் என்பதைக் குடமுழுக்கு என்று சொல்கிறார்கள். அதில் கும்பாபிஷேகம் என்பது வடமொழி. குடமுழுக்கு என்பது தமிழ். மொழி வெறுப்பினால் பெயரை மாற்றினார்கள். பெயரை மாற்றியதால் அர்த்தம் கெட்டுப் போகிறது. குடமுழுக்கு என்பது குடத்தை முழுக்காட்டுவது. குடம் வேறு, கும்பம் வேறு. குடம் என்பது வாயுடையது. அடி சிறுத்திருக்கும். நடு அகன்றிருக்கும் நுனி சிறுத்திருக்கும். அந்தக் குடத்தை நீருள் முழுக்குவது குடமுழுக்கு. அதற்குப் பெயர் கும்பாபிஷேகம் அன்று. கும்பம் என்பது கூம்பு வடிவில் இருக்கும். அது சிவபெருமானின் சிரசு. அது கும்பம். அதற்கு அபிஷேகம். அதுவே கும்பாபிஷேகம். தமிழில் குடமுழுக்கு என்பதால் அதன் அர்த்தமே கெட்டுப் போயிற்று. குடத்தை நீருள் மூழ்க வைப்பது குடமுழுக்கு. கும்பத்திற்கு நீரூற்றி, பாலூற்றி அபிஷேகம் செய்வது கும்பாபிஷேகம். அதனால் கும்பாபிஷேகம் செய்யவில்லை. குடத்தை நீருள் முக்கினாய்; அது பெரிய தவறு. அதனால் வாக்கியங்களை எந்த மொழியில் சொல்ல வேண்டுமோ அந்த மொழியில் தான் சொல்ல வேண்டும்.

இராமேஸ்வரம், சிதம்பரம், வேதாரண்யம், விருத்தாசலம் என்பன வடமொழிச் சொற்கள். விருத்தாசலத்திற்கு தமிழில் திருமுது குன்றம் என்றிருக்கிறது. திருமுதுகுன்றம் போவதற்கு ரிக்கற் கொடு என்றால் கொடுப்பானா? வேதாரணியத்திற்கு மறைக்காடு. வேதாரண்யம் என்று வடமொழியில் சொல்லமாட்டேன் மறைக்காட்டிற்கு ரிக்கற் கொடு என்றால் கொடுப்பானா? கீழே

இறங்கு எனக்கு மறைக்காடு தெரியாது என்று சொல்வான். எனவே, எந்த வாக்கியத்தை எந்த மொழியில் சொல்ல வேண்டுமோ அந்த மொழியில் தான் சொல்ல வேண்டும். மொழி வெறுப்புக் கொள்வது மிகவும் தப்பு. இரண்டு மொழியுமே நமக்குச் சொந்தம்.

வடமொழி என்பது இந்திய நாட்டிலுள்ள ஏதோ ஒரு பகுதியினருக்கு மட்டும்தான் சொந்தம் என்று நினைப்பது தவறு. இமயம் முதல் குமரிவரையிலுள்ள எல்லோருக்கும் சொந்தமானது அது. ஆகையால் தம்மொழி ஒரு ஒழுங்கோடு இருக்க வேண்டும் என்பதற்காக நன்றாகச் செய்யப்பட்டது சமஸ்கிருதம்.

உபதேச மந்திரங்கள் எல்லாம் சமஸ்கிருதத்தில் தான் இருக்கின்றன. பிராமணன் அல்லாத தீட்சை பெற்ற தென் நாட்டுச் சைவர்கள் பலர் சுத்தமான சமஸ்கிருதத்தில் பல சடங்குகளை தமிழ்நாட்டில் நடத்திக் கொண்டிருக்கிறார்கள், சிற்பிகளும் சைவர்களின் குருக்களும் வடமொழிப்பயிற்சி உடையவர்களாக இருக்கிறார்கள். ஆரியத்திற்குச் சமமான மொழி தமிழ். அது அண்ணா இது தம்பி.

வலது கைக்கும், இடது கைக்கும் வித்தியாசம் இருக்கின்றது. இரண்டு கைகளின் தன்மைகளும் வேறு. எப்பொழுதும் வலது இடது என்றுதான் சொல்வோம். ஒரு போதும் இடது வலது என்று சொல்ல மாட்டோம். அதேபோல் வடமொழி தென்மொழி என்று சொல்வோமே ஒழிய தென்மொழி வடமொழி என்றோ சொல்ல மாட்டோம். அப்படியெனில் எது உயர்ந்தது? வடமொழி உயர்ந்தது அல்லது இளையது அல்ல. இரண்டுமே சிவபெருமான் அருளிச் செய்த மொழிகள். அதனால் ஆரியத்திற்குச் சமனானது தமிழ். இரண்டும் ஒப்பு நோக்கத் தக்கனவே தவிர, ஒன்றுக்கொன்று உயர்வு தாழ்வு பார்ப்பது தவறு என்று சென்னையில் பெரும்புலவர் கி. வா. ஜெகந்நாதன் எழுதி இருக்கிறார்.

"மறைமுதற் கிளர்ந்த வாயான் மதிமுகில் முடித்தமேனி
இறைவர்தம் பெருமை நாட்டி இலக்கணம் செய்யப்பெற்று
அறைகடல் வரற்பிற்பாடு அணைத்துவென்று ஆரியத்தோடு
உறள்தரு தமிழ்த் தெய்வத்தை உண்ணிருந்து ஏத்தல் செய்வாம்"

என்பது சிவப்பிரகாசர் பாட்டு.

ஆகையால் மொழிகள் பல. பதினெட்டு மொழிகள். அந்த மொழிகளில் இரண்டு மொழி சிறந்தது. இந்த இரண்டு மொழியும் சிவபெருமான் அருளிச் செய்தது. அத்துடன், எல்லா மொழிகளையும் தமிழ் வென்றுவிட்டதாம். ஆரியத்தை வெல்லவில்லை. ஆரியத்தோடு சமமாக நின்றதாம். ஆரியமும் தமிழும் போட்டி போடவில்லை. சமமாக நிற்கின்றது என்று சிவப்பிரகாசர் என்னும் ஒரு புலவர் பாடுகிறார். ஆதலால் தமிழ்மொழி, வடமொழி இரண்டும் வேண்டும். அந்த வாக்கியம் எந்த மொழியில் சொல்லப்படுகின்றதோ அதுவே அழகு. பிரசாதம் என்று சொல்கிறோம். இது ஒரு வடமொழிச்சொல். சிவப்பிரசாதம் என்கிறோம். இதனை நாம் சிவன்கோயிற்சோறு என்று சொன்னால் நன்றாக இருக்காது. வீட்டில் ஆக்குவதும் சோறு. கோயிலில் கொடுப்பதும் சோறு. வீட்டில் ஆக்குவது சோறு. கோயிலில் ஆக்குவது பிரசாதம். எனவே மொழி வெறுப்புக் கூடாது. வடமொழியும் நமக்கு வேண்டும். இடதுகண் போதும் வலதுகண் வேண்டாம் என்று யாரும் சொல்ல மாட்டார்கள்.

- குளித்தலை இராமலிங்கம் அவர்களின் உரையிலிருந்து

# கிணற்றில் கங்கை நீர் பாய்ந்தது

அமிர்தா தியாகலிங்கம்

கார்த்திகை அமாவாசை கிணற்றில் கங்கை நீர் பாய்ந்து வழிந்தோடியது ஏன்?

ஊர் திருவிசநல்லூர். உயரிய சிவனடியாரான மகான் ஸ்ரீதரவெங்கடேச தீட்சதர். மைசூர் சமஸ்தானத்தில் பதவி வகித்த பிராமணராண லிங்கராயர் இவர் தந்தை. தந்தையின் மரணத்தின் பின் சமஸ்தானம் அளித்த பதவியை ஏற்காமல் தாயாருடனும் மனைவியுடனும் திருவிசைநல்லூர் வந்து தங்கியதாக அறியமுடிகிறது. இவரது காலம் *1635-1720* என்கிறார்கள். மிக ஆழ்ந்த சிவபக்தரான இவர் பல நூல்களை இயற்றியும், கீர்த்தனைகளையும், பாடல்களையும் புனைந்தும் உள்ளார். இவருடைய காலத்தில் இவருக்கு வேறு சில சிறந்த சமயப் பெரியார்களின் நட்பும் சந்திப்பும் கிடைத்தது.

திருவிடைமருதுார் மகாலிங்கசுவாமியின் மேல் பக்தி கொண்டு, தினம்தோறும் மாலை பிரதோஷ வேளையில் தரிசனம் செய்வார். பின் வீட்.டுக்கு வந்து உணவு உண்பார். ஒரு நாள் திரு விசைநல்லூருக்கும், திருவிடைமருதூருக்கும் இடையில் காவிரி கரைபுரண்டு ஓடியது. போக முடியவில்லை. வீட்டில் வந்து படுத்துக்கொண்டார். மழை வேறு. யாரோ கதவைத் தட்டிய சத்தம் கேட்டு எழுந்து திறந்தார். மகாலிங்கசுவாமி கோயில் அர்ச்சகர் பூசைப் பிரசாதங்களுடன் நின்றார். நீங்கள் சுவாமி பிரசாதம் பெறாமல் இரவு போஜனம் செய்ய மாட்டீர்கள் என்பதால் இதை எடுத்து வந்தேன் என்று கூறிக் கொடுத்தார். அர்ச்சகரை வீட்டினில் இரவு தங்க வைத்து காலையில் செல்லும்படி வேண்டிக்கொண்டு, குளிருக்கு போர்க்க ஒரு கம்பளியையும் கொடுத்தார். மறுநாள் காலையில் எழுந்து பார்த்தபோது அர்ச்சகரை காணவில்லை. காலைக்கடன்களை முடித்து நீராடி கோயிலுக்கு சென்றார். முதல்நாள் இரவு வந்த அர்ச்சகர் அப்போது கோயிலுக்கு வந்து கொண்டு இருந்தார்.

இவர் அர்ச்சகரிடம், “நேற்று எப்படி பிரசாதத்துடன் வந்தீர்கள், காலையில் ஏன் எனக்கு தெரிவிக்காமல் வந்துவிட்டீர்கள்?” எனக் கேட்டார். அர்ச்சகரோ ஆச்சரியப்பட்டு, “மிக்க மழை, காற்றுக் காரணமாகக் கோயிலைச் சாத்திவிட்டு, நானே வீடு சென்றுவிட்டு, இப்போதான் கோயிலைத் திறந்து பூசை செய்ய வருகிறேன்” என்றார். இருவரும் ஆச்சரியமாக கோயிலைத் திறந்து மகாலிங்கர் சந்நிதியைத் திறந்தால், உள்ளே சுவாமி கம்பளியைப் போர்த்தியபடி காட்சி கொடுத்தார். வந்தவர் மகாலிங்கரே என இருவரும் உணர்ந்து அவர் கருணையை எண்ணி மகிழ்ந்தனர். ஸ்ரீதரவெங்கடேச தீட்சதர் பாடினார். அப்போது பாடியதுதான் தயாஷ்டகம். மகாலிங்க சுவாமியைப் பார்த்து இரண்டு வரங்களைக் கேட்டார். ஒன்று, “சுவாமியே உங்களையே எப்போதும் நினைத்துக்கொள்ள வேண்டும்”. மற்றையது, “என் நா உங்களையே எப்போதும் சொல்லிக் கொள்ள வேண்டும்.”

இனி இவரின் வீட்டுக் கிணற்றில் கங்கை வந்ததைப் பார்ப்போம்.

அக்காலத்தில் பிராமணக் குடும்பச் சிரார்த்தங்களின் போது, பல அந்தணர்கள் வந்து ஓமம் வளர்த்துப் பூசைகள் செய்து திதி கொடுப்பார்கள். ஆறு, குளங்களில் நீராடி உணவு, தின்பண்டங்களைச் சமைத்து, திதி முடிந்த பின் வந்த அந்தணர்களுக்குப் பரிமாறிய பின்பு தாங்கள் உண்டது போக மிகுதியைப் பசு மாடுகளுக்குக் கொடுப்பார்கள். இது தான் நியதி. ஸ்ரீதர ஐயர் வீடடிலும் வருடந்தோறும் கார்த்திகை அமாவாசை அன்று சிரார்த்தம் நடக்கும். ஒரு

சிரார்த்த நாள் காவிரி நதியில் நீராடிவிட்டு வந்தார். வீட்டில் அதிகாலையில் எழுந்து நீராடி உணவு பட்சணங்கள் எல்லாவற்றையும் செய்து முடித்திருந்தார் ஐயாவின் தர்மபத்தினி. அப்போது வீட்டின் முன்னால் கந்தல் துணியணிந்த, பசியால் மிக வாடி, மயக்கம் போடும் நிலையில் ஒருவர். கருணைசீலரான ஐயர் அவருக்கு ஆசாரத்தை விடுத்து உணவு கொடுத்தார். அவர் மனைவி மீண்டும் நீராடி புதிதாக உணவு சமைத்துக்கொண்டார். இதை அறிந்த புரோகிதர்கள் ஜாதி தெரியாத ஒருவருக்கு உணவு கொடுத்ததால் தீட்டு ஏற்பட்டு விட்டதாகவும் தம்மால் சிரார்த்தம் செய்ய முடியாது என்றும் கூறிவிட்டனர். ஐயர் மன்னிப்புக் கேட்டும் முடியாது என்று கூறினார்கள். ஐயாவையும் தங்கள் சமூகத்தில் இருந்து விலக்கி வைப்பதாகவும் கூறினர். ஐயா, “இதற்குப் பரிகாரம் ஏதும் உண்டோ?” என வினவினார். அதற்கு அவர்கள் கங்கையில் நீராடிவிட்டு வந்தால் சிரார்த்தம் கொடுக்கலாம் என்றனர். “எப்படிக் கங்கை சென்று திரும்புவது?” என்று எண்ணிக் கவலைப்பட்டார். முடியாத காரியம். சௌந்தரநாயகி சமேத சிவயோகிநாதரை நினைந்து முறையிட்டபடியே இருந்தார். சிறிது அயர்ந்தும் விட்டார். இறைவன் கனவில் தோன்றி “கங்காஷ்டகம் பாடு, உன் கிணற்றில் கங்கை பொங்கும். நீராடு சிரார்த்தம் நடக்கும்” என்றார். ஐயாவும் திடுக்கிட்டு எழுந்து கிணற்றடிக்குச் சென்று கங்காஷ்டகம் பாடினார். ஐந்தாவது பாடலின்போது கங்கை கிணற்றிலிருந்து பொங்கி வழிந்தோடி கிராமமே வெள்ளக் காடானது. இக்கோடை காலத்தில் எங்கிருந்து வெள்ளம் வருகிறது என்று ஊரார் பார்த்தனர். ஐயா வீட்டுக் கிணற்றில் இருந்து வழிந்து ஓடியது. பயந்துபோன கிராமமக்கள், புரோகிதர்கள் எல்லோரும் “இப்படியே போனால் ஊரே வெள்ளத்தில் அமிழ்ந்து, அழிந்துவிடும். உங்கள் உயர்வு எங்களுக்குத் தெரியவில்லை” என்று மன்னிக்கும்படி வேண்டினர். ஐயாவும் இறைவனின் சக்தியால் கங்கையை கிணற்றுக்குள்ளே நிறுத்தினார்.



தடைப்பட்ட சிரார்த்தத்தைப் புரோகிதர்கள் சிறப்பாகச் செய்து முடித்தனர்; பசியாறினர். ஐயா விடமும், அவர்தம் பத்தினியிடமும் மிகப் பவ்வியமாகச் சிலாகித்து ஆசி கூறி விடைபெற்றனர். பின்பு மாலை திருவிசநல்லூர் கோயில் அர்ச்சகர், இரவுப் பூசைக்காகக் கோயில் கதவை திறந்த போது, ஒரு ஓலைச்சீட்டில், “இன்றிரவு நைவேத்தியம் செய்து படையல் செய்யாதீர். ஐயாவாள் வீட்டில் மதியத்தின் முன் உணவு உட்கொண்டாயிற்று.” என்று எழுதியிருந்தது. பின்னர், பசியோடும், கந்தல் உடையோடும் ஐயா இல்லத்தில் பசியாறியது சிவயோகி நாதரான சிவன்தான் என அனைவரும் உணர்ந்தனர். தங்கள் செய்கைக்காகப் புரோகிதர்களும் வெட்கப்பட்டனர். ஐயாவின் உயர்ந்த, நிறைவான, நிலையான பக்திநிலையும் வெளிப்பட, அவர் மக்களால் பூசிக்கப்பட்டார்.

பின் ஒவ்வொரு கார்த்திகை அமாவாசை நாளிலும் கிணற்றிலே தோன்றும் நீர் கங்கை இருப்பதையும், பிரசன்னமாவதையும் குறித்து நினைவூட்டும் வகையில், கிணற்றில் உள்ள நீரில் சிறு அலைகளும் நுரையும் காணப்படும். அமாவாசை அன்று பக்தர்கள் கங்காஷ்டகம் படிப்பார்கள்; பாராயணம் செய்வார்கள். கிணற்றுக்குப் பூசைகள் செய்வார்கள். இன்றும் பல்லாயிரக்கணக்காண மக்கள் இன, மத, வர்க்க வேறுபாடின்றி ஆண், பெண் இருபாலாரும் கங்கை நீரில் நீராடுகின்றனர். சமூகத் தொண்டர்கள் நாலா பக்கமும் வாளிகளுடன் நின்று நீரை அள்ளி ஊற்றுகின்றனர். அந்த இடத்திலேயே காலை, மாலை, இரவு என, சமைத்த உணவுகள் பரிமாறப்படுகின்றன. இன்றும் கார்த்திகை அமாவாசையில் இந்நிகழ்வைக் காணலாம்.

மேற்கூறிய நிகழ்ச்சியை உறுதிப்படுத்துவது போல் சமீபத்தில் ஒரு நிகழ்ச்சி நடந்துள்ளது. தஞ்சை மாவட்டம் கும்பகோணம் அருகில் உள்ள திருமாந்துறையில், திருவாவடுதுறை ஆதீனத்தின் ஆளுகைக்குட்பட்ட *1200* ஆண்டுகள் பழமையான கோயில் உண்டு. இறைவன் ஸ்ரீ அக்ஷய நாதசுவாமி. இறைவி ஸ்ரீ யோகநாயகி. இங்கு உள்ள சந்திரக் கிணற்றில் *06-12-2018* அன்று நீர் பொங்கி வழிந்தோடத் தொடங்கியது. இதை அறிந்த ஆதீன முதல்வரும், ஊர்மக்களும் வந்து நீராடியும், கலசங்களிலும் தீர்த்தமாக பிடித்தும் வீடுகளுக்கு எடுத்துச் சென்றனர்.

ஆதீனமுதல்வர் நீராடிய பின் சிறப்புப் பூசை செய்தார்கள். இச்சந்திர கிணறு அரைசந்திர வடிவில் உள்ளது. வளர்பிறைகளில் நீர் கூடுவதும் தேய்பிறைகளில் நீர் குறைவதும் நடைபெறும். இந்த ஆலயம் ரோகிணி நட்சத்திரகாரரும், விருச்சிக ராசிக்காரர்களும் பரிகாரம் செய்யும் ஆலயமாகும். காலமா முனிவரையும், நவக்கிரகங்களையும் பிடித்த தொழுநோய் காரணமாக இங்கு வந்து பூசை செய்து, இக்கிணற்று நீரில் நீராடி நோய் தீர்ந்து நலமாகினர் என வரலாறு கூறுகின்றது.

# What is maturity?

## Maturity is....

- When you stop trying to change others... instead focus on changing yourself.
- When you accept people as they are.
- When you understand everyone is right in their own perspective.
- When you learn to “let go”.
- When you are able to drop “expectations” from a relationship and give for the sake of giving.
- When you understand whatever you do, you do for your own peace.
- When you stop proving to the world, how intelligent you are.
- When you don’t seek approval from others.
- When you stop comparing with others.
- When you are at peace with yourself.
- When you are able to differenciate between “need” and “want” and are able to let go of your wants.
- When you stop attaching “happiness” to material things.

- by Adi Sankarachariyar




ஆறு பருவங்களில் இளவேனிற்காலமே வசந்த காலமாகும். இக்காலத்தின் முதல் மாதமே சித்திரை மாதமாகும். சித்திரை நட்சத்திரம் பூரணையோடு கூடியகாலம் சித்திரை மாதம் எனப்பட்டது. பனிக்காலம் நீங்கி, சித்திரை மாதம் தொடக்கம் 12 மாதங்கள் கொண்ட ஒரு வருடத்தைப் புது வருடமெனக் கணித்தனர். சூரியன் ஒவ்வொரு வருடமும் பங்குனி 21ஆம் நாளிலும் புரட்டாதி 21ஆம் நாளிலும் பூமியின் நடுக் கோட்டுக்கு உச்சியில் வரும். ஆகவே இவ்விரு நாள்களிலும் இரவு பகல் சமமாக வரும் ஆங்கிலேய குடியேற்ற ஆட்சிச் செல்வாக்கால் இதனை கிரகோரி ஆண்டு முறை (Gregory calendar) எனக் கொண்டு வந்தனர். இந்து மக்கள் சூரியன் மேட ராசியில் பிரவேசிக்கும் சுப வேளையைத் தமிழ் வருடப் பிறப்பாகக் கொள்வர். எனினும் தை மாதம் தொடக்கம் ஆனி மாதம் முடியும் வரையுள்ள ஆறு மாதத்தை உத்தராயண புண்ணியகாலம் என அழைப்பர். சித்திரைப் புத்தாண்டு சூரியனைக் கொண்டு கணிக்கும் சௌரமான முறையில் அமைக்கப்பட்டுள்ளது.

மழை நீங்கி, பகலவன் வெளிப்பட, தொழில் செய்ய வழி ஏற்படுகிறது. அத்துடன் நோய் பிணி நீங்கவும்கூடும். செஞ்சுடரோன் எழும்பொழுது மக்கள் மனதில் உவகை ஏற்படுகின்றது முதல்நாள் வீடு வாசல் கூட்டிப்பெருக்கிப் பொங்கல் பொங்குவர். உயிரினங்கள் யாவும் இன்பம் பெறும். அதிகாலை தீபம் ஏற்றிக் காலைக்கடன்களை முடித்துப் புத்தாடை தரித்து ஆபரணங்களால் சிங்காரித்து, பெரியோர் வாழ்த்தைப் பெறுவர். எமது வாழ்வைக் கணிப்பது ஐந்து அம்சங்களாகும். திதி, வாரம், நட்சத்திரம், யோகம், கரணம் என்பவையாகும். இவ்வைந்தும் சேர்ந்தே பஞ்சாங்கம் எனப்படும். திதி நன்மையை வளர்ப்பது. வாரம் ஆயுளை வளர்க்கும் நட்சத்திரம் பாவத்தைப் போக்கும். யோகம் ரோகத்தைப் போக்கும். கரணம் வெற்றியைத் தரும். நடந்தவை நடந்தவையாக நடக்கட்டும். நடப்பவை நல்லனவாக அமையட்டும்.. தமிழ் மக்கள் அதிகாலையில் எழுந்து மருத்துநீர் தேய்த்து நீராடி, புத்தாடை அணிந்து ஆலயம் சென்று வழிபாடு செய்வர்.

மருத்துநீர் என்பது மலர்கள் அறுகம்புல் பால் மஞ்சள் வாசனைத் திரவியங்கள் முதலியவற்றை நீரில் இட்டு அவித்துப் பெறப்படும் நீராகும். இது தோஷங்களையும் நோய்களையும் போக்கவல்லது. மருத்து நீரால் நீராடும் பொழுது உடல் தூய்மை அடைகிறது. ஆலயம் செல்லும்போது உள்ளம் தூய்மை அடைகிறது. தைத்தினத்தில் பொங்கல் பொங்குவது போல சித்திரை நாளன்று சூரியனுக்குப் பொங்கல் பொங்கும் வழக்கம் கிராமங்களில் நடைபெறும். விசேட உணவுப் பதார்த்தங்களும் இனிப்புப் பண்டங்களும் தயாரித்து உற்றார் உறவினர் நண்பர்களுடன் ஒன்று கூடி உண்டு மகிழ்வர்

வருடப் பிறப்பன்று ஒருவகைப் பச்சடி தயாரித்து வருபவர்களுக்கு வழங்கும் பழக்கமும் உண்டு. இது கசக்கும் வேப்பம்பூ, புளிக்கும் மாங்காய், இனிக்கும் சர்க்கரை கலந்து செய்யப்படுகிறது. பச்சடி போல வாழ்க்கை கசப்பும் இனிமையும் கலந்திருப்பதைக் காட்டி நிற்கிறது. மேலும் கைவிசேடம் வழங்குதல் தாம்பூலம் பரிமாறல் பஞ்சாங்கம் பார்ப்பது போன்றனவும் சில நிகழ்வு களாகும். பெரியோர்களை வணங்கி வாழ்த்துப் பெறுவதும் முக்கிய நிகழ்வுகளாகும். புதுவருடம் தொடங்கியபின் தொழிலை ஆரம்பிக்கும் நல்ல நாள் சுப நேரம் பார்த்தல் போன்றவற்றை பஞ்சாங்கம் கொண்டு கணிப்பர்.

மேலும் கிளித்தட்டு மறித்தல், போர்த்தேங்காய் உடைத்தல், மாட்டு வண்டிச்சவாரி போன்ற போட்டிகளும் நடைபெறும். குறிப்பாகப் பெண்களுக்குரிய ஊஞ்சலாடுதல் பல்லாங்குழி விளையாடுதல் போன்றவைகளும் குறிப்பிடத்தக்க நிகழ்வுகளாகும். புலம்பெயர்ந்த நாடுகளில் வாழும் தமிழ் மக்கள் இவற்றை நடாத்தி எதிர்கால சந்ததியினர் அறியும் வண்ணம் தமிழரது பாரம்பரியங்களைத் தொடர்ந்து கடைப்பிடிக்க வேண்டும்

.

சித்திர புத்திரன் கோயில்:

தவம் செய்யும் பிரமன் உடலில் இருந்து ஒரு புருடன் தோன்றினான். உடலைக் காயம் என்பர் காயத்தில் இருந்து தோன்றியபடியால் அவருக்கு காயஸ்தன் என்ற பெயரும் உண்டு. அவரைப் பிராணிகளின் பாவபுண்ணியங்களைக் குறித்து யமனிடம் அறிக்கை தரும்படியும் யமனது சபையில் இருக்கும்படியும் பிரமன் கூறினார் சித்திர குப்த சந்ததியில் தோன்றியவர்தான் காயஸ்தர் என்னும் கணக்குப் பிள்ளையாவார்.

யமனுடைய கணக்குப் பிள்ளையே சித்திரகுப்தனார். அவரவர் செய்த நன்மை தீமைகளை எழுதி இறுதியில் உத்தரிக்கிற காலங்களை வாசிப்பவர் சித்திரகுப்தர் ஆவர். காஞ்சி மாநகரில் சித்திர குப்தனுக்குத் தனிக்கோயில் உள்ளது. சித்திராப் பௌர்ணமியில் விசேட பூசை நடைபெறும் இந்திரனும் தனது .பாவத்தைப் போக்க மதுரையில் உள்ள காலஸ்ய நாதனைப் பூசித்தார் ஆண்டுதோறும் இந்திரன் வந்து வணங்குவதாக ஐதிகம். அந்தப் புண்ணிய காலத்தில் பல ஆலயங்களில் அன்னதானம் நடைபெறுகிறது

சித்திரைக் கஞ்சி

சித்திரகுப்தனின் கதையை ஒருவர் வாசிக்க மற்றவர்கள் அதைக் கேட்டு மகிழ்வர். அவரைப் பதுமையில் இருத்தி அன்னம் வெல்லத்துடன் கலந்து எள் பால் நெய் முதலியவற்றுடன் படைத்து முடிவில் பாயாசமும் சேர்த்து வழங்கப்படும். அன்று உப்பில்லாத உணவுண்டு விரதம் இருக்க வேண்டும். ஏழைகளுக்கு கஞ்சி காய்ச்சி ஊற்றுவார்கள். இதற்கு சித்திரைக் கஞ்சி என்று பெயர்.

கடவுளை வழிபட்டுக் காலத்தை வெல்வது கால வஞ்சனம், மார்க்கண்டேயரது மார்க்கமாகும். அடுத்து, சாவித்திரி காலனை வணங்கி வெல்வது கால வந்தனம் ஆகும் காலத்துக்கு உட்பட்ட யமதர்மன் தருமத்துக்குப் புறம்பாக நடந்து கொண்டான். சாவித்திரி தனது கணவனிடம் அளவு கடந்த அன்பை வைத்திருந்ததால் தனது அநுக்கிரக வாக்கைக் காக்கும் பொருட்டு வரமளித்தார்.

இந்திரவிழா

கார்த்திகையில் வீட்டுக்குள் விளக்கேற்றி வழிபட்டவர்கள் மார்கழி, தை மாதங்களில் பொய்கையில் நீராடி மகிழ்ந்த மக்கள், பங்குனியில் வரும் வசந்தம் மனதில் எம்மட்டுப் பேருவைகையைக் கொடுக்கும். பூத்துக் குலுங்கும் சித்திரையில் காவிரி கலக்கும் கடற்கரையில் தமிழ் மக்கள் மகிழாது இருப்பார்களோ? சிலப்பதிகாரம், மணிமேகலை ஆகிய பழங்கால இலக்கியங்கள் இந்திரவிழா பற்றிப் பாராட்டிப் பேசுகின்றன. எனவே இந்திரனை முன்னிட்டுச் செய்த விழா இந்திரவிழா எனப்பட்டது.

சித்திரா பூரணை

சித்திரை மாதம் சித்திரை நட்சத்திரம் கூடிய பூரணையே சித்திரா பூரணையாகும் அன்று சித்திரகுப்த விரதம் நோற்பார்கள். அன்று பொங்கும் பால்போல் மக்கள் மகிழ்ச்சியில் பொங்குவர்.

**தொடர்ச்சி 44ஆம் பக்கம்**

# தமிழரின் சைவப் பாரம்பரியமும் உடல், உளநலமும்

அம்பாளுக்கு ஆடிப்பூரத் திருவிழா செய்யவேண்டுமா? பெண்களுக்கு பூப்பு நீராட்டு விழாச் செய்வது ஏன்?

சைவ சமயச் சம்பிரதாயங்கள் பல மனித வாழ்வுக்கு வழிகாட்டியாக உள்ளன என்றால் மிகையாகாது. இந்தச் சம்பிரதாயங்களை உணர்ந்து பின்பற்றுபவர்கள் நன்மையடைவார்கள். விஞ்ஞானமும் அவற்றை ஆதரிக்கிறது. மகாசிவராத்திரியில் கண்விழித்து வழிபாடு செய்வதிலிருந்து திருவெம்பாவைக்காலத்தில் அதிகாலையில் எழுவது, மகோற்சவ காலத்தில் விரதம் அநுட்டிப்பதுவரை எல்லாம் சமய அநுட்டானங்கள் போலத் தோன்றினாலும் அவை விஞ்ஞான சம்பந்தமானவை, நமக்கு நன்மை பயப்பவை என்பது தெளிவு.

ஒரு சின்னஞ்சிறுமியாகத் துள்ளித்திரிந்தவள் பருவமடையும்போது உடல், உள்ள ரீதியாகப் பாதிப்பு அடைகிறாள். அதிர்ச்சியும் அடைகிறாள். அந்தச் சிறுமி தனது வீட்டிலுள்ள ஏனைய பெண்கள், உறவினர்களோடு ஒன்றுகூடி, இந்த நிகழ்வை மகிழ்ச்சியாகக் கொண்டாடும்போது அவளின் மனம் ஆறுதலடைகிறது. அவளின் மனநலத்துக்கும் அது நன்மையளிக்கிறது. இந்தக் கொண்டாட்டம் எமது சைவத் தமிழ்ச் சம்பிரதாயத்தில் முக்கியமானது என்று நாம் பெருமைப்படலாம்.

ஒரு சில சமூகங்களில் பருவமடைந்த பெண்ணை அவளின் கன்னம் சிவக்கும்வரை அடிப்பார்களாம். வேறு சில சமூகங்களில், இது நீ செய்த பாவம் என்று பெண்ணை வைவார்களாம்.. இப்படியான செயல்களால் அந்தப் பெண்ணின் மனநிலை எவ்வளவு சங்கடப்படும் என்று நினைத்துப்பார்க்கவே சங்கடமாக இருக்கிறது. இல்லையா? இப்படியான செயல்களால் பாதிக்கப்பட்டு, மனநலம் குன்றி, மனநல மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட பெண்களை நான் எனது மருத்துவ சேவைக்காலத்தில் கண்டுள்ளேன். இது மிகுந்த மனவருத்தத்துக்குரியது.

கோயில்களில், ஆடிப்பூரத் திருவிழாவில் அம்பாளுக்கு அறுபத்துநான்கு விதமான அலங்காரங்கள் செய்யப்படும். இதைச் செய்யும்போது பக்திப்பெருக்கால் சிவாசாரியாரின் கண்களில் நீர் பெருகுவதைக்கண்டு நான் ஆச்சரியம் அடைந்துள்ளேன்.

சிவனோ "ஆண்டி". அம்மனோ "சர்வாலங்கார பூஜிதை", அறுபத்து நான்கு அலங்காரங்கள் செய்பவள். பெண்களும் அப்படி அறுபத்துநான்கு அலங்காரம் செய்யாவிட்டாலும் ஓரளவாவது தங்களை அலங்காரம் செய்யலாம் அல்லவா? அப்படிச் செய்தால், அவளுக்கு மட்டுமன்றி அவளைச் சூழ்ந்துள்ளவர்களுக்கும் அது மகிழ்ச்சியைக் கொடுக்குமே!

நமது இலங்கை நாட்டில் அநுபவம் மிக்க மனநல மருத்துவப் பேராசிரியர் ஒருவர் இருபத்தைந்து ஆண்டுகளுக்கு மேலாக இருந்தார். அவர் வேற்று இனத்தவர். நான் மருத்துவக் கல்லூரியிற் படித்த நாள்களில் அவர் கூறியதை இங்கு நினைவுகூர விரும்புகிறேன். "தமிழர்கள் சமூகத்தில் பூப்பு நீராட்டு விழாக் கொண்டாடுவதால் பல நன்மைகள் அந்தச் சமூகத்துக்குக் கிடைக்கிறது. அதனால் அவர்கள் அதைக் கைவிடாது பேணவேண்டும். அதோடு ஆணா பெண்ணா என்ற அடையாளம் தெரியாத நிலை உங்கள் சமூகத்தில் இல்லை" என்று அவர் கூறினார். ஒரு சிறுவனோ, சிறுமியோ பூப்பு நீராட்டு விழாவுக்குப் போகும்போது ஆண், பெண் வித்தியாசத்தை அறிந்துகொள்கிறார்கள்.

கயிலைமணி மருத்துவகலாநிதி திருமதி இரத்தினராசா

இது தவிர, ஒரு கொண்டாட்டம் நடக்கும்போது அந்த இடத்தைச் சுற்றியுள்ள சமூகமும் நலமடைகிறது. விருந்து, புதிய ஆடை வாங்குதல், இசை நிகழ்ச்சி நடப்பது போன்றவற்றால் அந்தந்தத் தொழில் புரிவோரும் பொருளாதாரம், மனமகிழ்ச்சி என்பவற்றால் நிறைவடைவார்கள்.

பருவமடைந்த அந்தப் பெண்ணுக்கும், அவளின் குடும்பத்துக்கும், அந்தக் குடும்பத்தைச் சுற்றியுள்ள சமூகத்துக்கும் நன்மையும் மகிழ்ச்சியும் கிடைக்கும் என்பது உறுதி. ஒருவகையில் இது ஒரு சமூகசேவை ஆகிறது. எனவே இதன் நன்மைகளை அடுத்த தலைமுறைக்கு எடுத்துச் சொல்லி, கொண்டாடி மகிழுங்கள்.



# Thirukkural Stories
# திருக்குறட் கதைகள்

சாவித்திரி ஆனந்தன்

## வாய்மை
Truthfulness

அதிகாரம்: 30 குறள் : 300
Chapter: 30 Kural: 300

யாம்மெய்யாக் கண்டவற்றுள் இல்லை எனைத்தொன்றும்
வாய்மையின் நல்ல பிற

Meaning: Amidst all that we have seen (described) as real(excellance), there is nothing so good as truthfulness.

பொருள்:- யாம் உண்மையாகக் கண்ட பொருள்களுள் வாய்மையை விட எத்தன்மையாலும் சிறந்தவையாகச் சொல்லத்தக்கவை வேறு இல்லை.

மகாபாரதக் கதையில், பஞ்சபாண்டவர்கள் 12 ஆண்டுகள் வனவாசமும் ஓராண்டு அஞ்ஞாதவாசமும் முடித்து வெளியே வந்தார்கள். துரியோதனன் நாடுதர மறுத்துவிட்டதால் போர் தவிர்க்க முடியாததாகிவிட்டது. பாண்டவர்களும் கௌதமர்களும் தத்தமக்கெனத் படை திரட்ட ஆரம்பித்தார்கள். உபலாவியம் என்ற இடத்திலிருந்து பாண்டவர்கள் படை திரட்டினர். பாண்டவர் தந்தை பாண்டு மன்னனுக்கு இரண்டு மனைவியர். மூத்தவள் குந்தி, இளையவள் மாத்ரி. குந்திக்கு தருமன், பீமன், அருச்சுனன் என்று மூன்று புதல்வர்களும் மாத்ரிக்கு நகுலன் சகாவேன் என இரண்டு புதல்வர்களும் இருந்தார்கள். மாத்ரியின் சகோதரன் சல்லியன் வலிமையும் பேராற்றலும் கொண்டவன். வரப்போகும் போரில் தன்னுடைய மருமக்களுக்கு உதவும் முகமாக தன் பெரும் படைகளுடன் உபலாவியம் நோக்கிப் புறப்பட்டான்.

இதை அறிந்த துரியோதனன் யாரும் வெற்றி கொள்ள முடியாத சல்லியனை போரில் தனக்கு உதவியாக்கத் திட்டமிட்டான். நெடுந்தூரம் பயணம் செய்தமையால் சல்லியனும் அவனது படைகளும் சோர்வடைந்தனர். பாலைநிலம் குறுக்கிட்டதால் பசி, தாகம் என்பவற்றுடன் வெய்யிலின் வெப்பக் காற்றும் சேர, படை வீரர்கள் துடித்துப் போனார்கள். இதைக் கண்ட சல்லியன் மிகவும் வேதனையடைந்தான். எப்படியோ மேலும் சில தூரம் முன்னேறிச் சென்றார்கள். என்ன அதிசயம்! வழியில் அவர்களுக்கு முன்னால், தங்குவதற்கு வசதியான ஒரு பெரிய பந்தல் காணப்பட்டது. சிலர் வந்து முகமன் கூறி சல்லியனையும் படைகளையும் வரவேற்று அழைத்துப் போனார்கள். எல்லோருக்கும் அறுசுவை உணவும் குளிர் பானங்களும் வழங்கப்பட்டதில் அவர்கள் களைப்பாறினார்கள். இது சல்லியனை மிகவும் மகிழ்ச்சியில் ஆழ்த்தியது. சந்தோஷம் மேலிட அவன், “இங்கு அறச்சேவை செய்த அறவோன் யாராக இருப்பினும் அவனுக்கு என் உடல், பொருள் ஆவி அனைத்தையும் கொடுத்தாலும் அந்தக் கைம்மாறு போதாது.” என்று உரத்த குரலில் வாய்விட்டுக் கூறிவிட்டான்.

“மாமா! தங்கள் மருமகனாகிய நானே இப்படித் தங்களை உபசரிக்கும் பேறு பெற்றேன். உடல், பொருள், ஆவி அனைத்தையும் தருவதாக சொன்னீர்கள். வரப்போகும் போரில் நீங்களும் உங்கள் படைகளும் எனக்குத் துணையாக நின்றால் அதுவே போதும். அதுவே நான்

எதிர்பாரக்கும் கைம்மாறு" என்று சல்லியனிடம் கூறினான். தன்னை மறந்து சல்லியன் கூறிய வார்த்தைகள் அவன் தன் மருமக்களுக்கு செய்ய நினைத்த கடமைக்கு மாறாக அமைந்துவிட்டன.

வாய்மையா? கடமையா? சல்லியனுடைய இந்த கண்ணோட்டத்தில் வாய்மையே முதலிடம் பெற்றது. போரில், துரியோதனனுக்கு உதவிபுரியத் தீர்மானித்ததனால் தனது பெரும் படையுடன் சல்லியன் அத்தினாபுரம் நோக்கிப் புறப்பட்டான். போரில் துரியோதனனுக்காகவே தன் உயிரையும் கொடுத்தான். வாய்மை காத்த சல்லியன் செயலை உலகமே போற்றியது. தமக்கு எதிராகப் போரிட்டபோதும் சல்லியனைப் பாண்டவர்கள் வெறுக்கவில்லை. வாய்மை காத்து நின்ற அவனுடைய உயர் பண்பைப் பாராட்டி அவனைக் கொண்டாடினார்கள்.

In the Epic Mahabharata , Pandavas, after living 12 years in the forest and one year in hiding (Angnathavasam) returned to the country. Duriyodhana still refused to give them their land and thus the war became unavoidable. Both parties began preparing for the war and started to gather troops. Pandavas assembled their troops in a place called Upalaviyam.

Pandavas' father Pandu has two wives. The first wife was Kunthi and the other Mathri. Kundhi gave birth to three sons Dharma, Bheema, and Arjuna. Whereas Mathri gave birth to Nagula and Sahadeva. Mathri's brother Salliyan was a very talented warrior and good at handling weapons. He decided to offer his help to his nephews in war and began travelling towards Upalaviyam with his troops.

Duriyodhana on hearing this, planned to get help and make use of Salliyan's troops in the war. Salliyan and his troops were travelling a very long distance and got exhausted with hunger and thirst. The travel via desert and the hot Sun, made them very fatigued. On seeing his troops in fatigue, Salliyan felt very sad. However they managed to proceed some more distance.

What a surprise? They saw a tent ahead, and some people came out to welcome Salliyan and his troops. Those people invited Salliyan and his troops inside. After some time all were provided with delicious food and cold drinks. This made Salliyan to feel very happy.

He became very emotinal and shouted loudly. "Oh! It's not enough to give my body, wealth and life as a reward to the person who offered such a wonderful welcome with refreshments and a place to rest." Waitng for this chance, Duriyodhana came out from inside and stood in front of Salliyan and said, 'My dear uncle! I got this opputunity to welcome you but it is not necessary for you to contribute your body, wealth and life to me. Instead, I request you to be with me and help me in the forthcoming war, that would be the best reward that you can give me". The words that came out from Salliyan's mouth in an emotional moment, has now became an obstacle to his duty towards his nephews. Keep your word or keep your wish? Keeping the word and being truthful won.

Salliyan decided to offer his help to Duriyodhana's side and went to Hasthinapuram with his troops. He finally sacrificed his life in the war on behalf of Duriyodhana. Peoples around the world praised Salliyan for his truthfulness. Pandavas, even though Salliyan fought against them, appreciated his truthfulness and commitment.




# Manickavachagar

by Swami Sivananda

His relatives apprehensive of the real state of Manickavachagar’s mind appealed to him to look after them and not renounce the world. He laughed and said: “Oh friends, the day the Lord initiated me, I have offered everything at His Feet. I have now no relatives except the Lord and His devotees. I have no connection with this body, even. My only attachment is with the Lord Who is the remover of all our sins and bestower of Immortal Bliss. Birth is painful. Death is painful. I do not worry about anything in the world now. I will beg happily with my palm as my begging bowl and appease my hunger with the food that is received by chance. When the earth is ready to give me shelter, why should I resort to a special dwelling place? The perfume I smear my body with is the sacred ash. My only belonging is the garland of Rudraksha which destroys the sins of many births. Oh friends, when I am under His protection, why should I fear anybody?

With his thought fixed on the Lord, Manickavachagar was expecting the auspicious day. In the meantime, one of the ministers had told the King that in truth Manickavachagar had spent all the money in the construction of temples and that Manickavachagar’s statement was false. The King’s suspicion increased. He sent some messengers to Perunturai to see whether the horses were really there. They returned with a negative reply. Only two days remained now. The King did not get any information about the horses. So, he ordered his soldiers to torture Manickavachagar and get the money back. They informed Manickavachagar of all that had happened in the Court. He kept quiet. They tormented him, according to the King’s orders. He bore everything, fixing his mind on the Lord. The Lord Himself bore all the torture and the Bhaktha was relieved. The soldiers could not understand the secret of his endurance. They tortured him further! He prayed to the Lord. The Lord heard His Bhaktha’s prayer and wanted to play His Lila. He willed that all the jackals of the place should assume the form of horses. He also sent His celestial servants to act as horsemen. He Himself assumed the form of a trader in horses. He reached Madura. The dust raised by the galloping horses filled the sky. The people were wonderstruck to see the fine horses. That day was Avani Moolam. The thought that he had unnecessarily tortured Manickavachagar pained the King’s Heart. He at once released him and apologised to him. Both of them went to the place where the horses had been stationed. The King was happy to see the good quality of the horses. The merchant was also very handsome. Manickavachagar knew that it was the Lord Himself and so mentally prostrated to Him. The King’s servants led the horses to the stable.

Day passed into night. In accordance with the Lord's will, the horses assumed their original form of jackals, broke the reins and fled from the stable howling. Some of them even injured the real horses. A few old jackals remained in the stable. The next morning, the horsemen did not find any of the horses and there were only a few old jackals in the stable. They immediately reported the matter to the King. The King got terribly angry with Manickavachagar who, he thought, had deceived him by magic. The King's soldiers again began to torture him and Manickavachagar prayed to the Lord for His Help.

At once, the Lord caused a heavy flood in the river Vaigai. There was panic everywhere in the town. The people could not understand the untimely flood. The soldiers who were guarding Manickavachagar also fled. He went to the temple. He worshipped Lord Somasundarar and was completely absorbed in meditation. The King was puzzled. He wanted to save the city from destruction. So, he ordered everyone in the city to bring one basketful of mud and throw it on the bank of the river to stem the flood. Everyone, except an old woman by name Vandi, did so. She sold Pittu (a sweetmeat) and eked out a livelihood. She was so much devoted



to Lord Somasundarar that she would daily offer it to Him first and then sell it. She was in distress. She prayed to the Lord for help. Lord Siva, out of His compassion appeared as a labourer and offered his services in return for a handful of Pittu. With a dirty cloth around his waist and a basket on his head, he would sing and dance and then put mud on the bank of the river. He ate her kind offering and threw the mud with such force that it caused new breaches! For some time, he would sit idle and again sing and dance. The King's servants found the breach not closed where the Lord was working and reported the matter to the King. The King who personally supervised the work, noticed the idleness of the labourer, and hit him with a stick. The Lord threw mud on the breach, and it was closed. The blow, however was felt by all beings in the whole universe. The King at once understood that it was all the Lord's Lila. He recognised the greatness of Manickavachagar. At that time, he heard an invisible voice: "Oh King, your entire wealth was spent on Me and My Bhakthas. By this act Manickavachagar earned for you great merit. Instead of being grateful to him, you have tortured him. The jackals turning into horses and this sudden flood, were all Lilas performed by Me for the sake of My devotee. At least now open your eyes and learn a lesson for your future."

*To be continued....*

39ஆம் பக்கத் தொடர்ச்சி..

## சித்திரை மாதக் குரு பூசை நாள்கள்

| | |
|---|---|
| பரணி: சிறுத்தொண்டர் | ரோகினி: மங்கையர்க்கரசியார் |
| திருவாதிரை: விறன்மிண்டர் | சித்திரை: இசைஞானியார் |
| சுவாதி: திருக்குறிப்புத் தொண்டர் | சதயம்: திருநாவுக்கரசர் |

# RUBY'S

CATERING

**020 8799 7180**

mail@rubyscatering.co.uk | www.rubyscatering.co.uk

உன்னத உணவு | வைபவ மண்டபம் | மகோன்னத உபசரிப்பு



திருமணம் - பிறந்தநாள் - பூப்புனித நீராட்டு விழா

கலாச்சார நிகழ்ச்சிகள் - விருந்து உபசாரம்

அரங்கேற்றம் - வளைகாப்பு - பெயர் சூட்டும் விழா



**ACCREDITED SRILANKAN CATERERS @**

Hilton | THISTLE HOTELS more than just accommodating | Holiday Inn

*உட்பட பிரபல ஹோட்டல்களில் அங்கீகாரம் பெற்ற*
*தரம்மிகு இலங்கை மற்றும்*
*தென்னிந்திய உணவுத் தயாரிப்பாளர்கள்.......*

**Tel: 020 8799 7180**

mail@rubyscatering.co.uk | www.rubyscatering.co.uk


WESTERN
Jewellers
வகை வகையான வடிவங்களில் தரமான தங்க நகைகளை குறைந்த
விலையில் பெற்றுக்கொள்ள நாடுங்கள்.. உங்கள் வெஸ்டன் ஜூவலர்ஸ்.
SRI LANKAN FIRST JEWELLERY SHOP IN UK
Specialise in 22 ct Gold, White Gold, Platinum
& Diamond Jewellery.
Tooting Branch.
NO : 230
UPPER TOOTING ROAD
LONDON,
SW17 7EW
TEL : 020 8767 3445
Wembley Branch.
5 PLAZA PARADE,
29 -33 EALING ROAD,
WEMBLEY, MIDDX,
HAO 4YA
TEL : 020 8903 0909
SILK
EMPORIUM
TEL : 0208 6721 900
122 UPPER TOOTING ROAD,
LONDON, SW17 7EN.
OPENING HOURS : MON - SAT (10.30 AM - 6.30 PM). SUNDAY (11.30 AM - 6.30 PM)